டேக்பான் (ஆறு மாநிலம்) ரெட்டி நலச்சங்கம்

நமக்கு நாம்!





நாடு நமது!

தோற்றம்: 14.04.1987

ஜூன் 2023

# ரெட்டி பண்பாடு

REDDY PANPADU

காலாண்டிதழ்

రెడ్డి పణ్పాడు | ರೆಡ್ಡಿ ಪನ್ಪಾಡು | റെഡ്ഡി പൺപാട്



## கலாச்சாரத்தைக் காத்திட விழையும் பகலவன்

ஸ்ரீமான் திரு.பகவதி ரவீந்திரநாத் ரெட்டி

கொச்சின், கேரள மாநிலம்

TAKEPON REDDY
NALA SANGAM MEET 2023

# Reddy Women & Youth Leadership International Convention

## 23-25 December 2023 at Chennai City, Tamilnadu

*Venue :EVP Rajeswari Palace, Chennai*

*Proposed Programme*

*There will be Three Seperate Sessions for Women, Younger Generation and TAKEPON Excecutives*

**Day 1**
Friday 23-12-2023
2 pm to 6 pm

Introduction Session
Inauguration
with Welcome Dinner
8pm onwards
@ Hall A

**Day 2**
Saturday 24-12-2023
9 am to 6 pm

| Hall A | Hall B | Hall C |
|---|---|---|
| Women Empowerment & Leadership Session | NextGen Development & Leadership Training | TAKEPON Excecutives Meeting |

- 7pm onwards Family Culturals, Celebration and Gala Dinner

**Day 3**
Sunday 25-12-2023
9 am to 1 pm

Leaders Interaction and
Valedictory function
with Lunch

Registration is mandatory - Registration Fees Rs-3000 /- per person - Kindly send yours, your children details to Dr.S.Venkatesh Babu,MCh Orth., FRCS, Sri Sakthi Hospital, 48F,Xaviers's Colony, South Bypass Road, Tirunelveli City 627 005

drsvbabu@hotmail.com

*Let's Unite and Win*

TAKEPON REDDY
NALA SANGAM MEET 2023

Reddy Women & Youth Leadership International Convention

23-25 December 2023 at Chennai City, Tamilnadu

- Women Empowerment
- NextGen Development
- Leadership Training
- Health & Wealth Sessions
- Business Lessions
- Career Guidance
- Family Get-together
- Legal Knowledge
- Agricultural Enlightenment
- English & Comunication Skills
- Creativity & Innovative Workshops
- Mindfullnes & Success Seminars
- Many More...

Advt M.V.Vaithilingam 98431 33287
Advt G.Girubakaran 94433 55481
Dr.S.Venkatesh Babu 98430 57118
Dr.C.Sumathi 94878 10000
Mr.Ravichandran 94447 00100

Conference Secretariat : Sri Sakthi Hospital, 48F,Xaviers's Colony, South Bypass Road, Tirunelveli City 627 005

drsvbabu@hotmail.com

*Let's Unite and Win*

## ரெட்டி பண்பாடு

**கௌரவ ஆசிரியர்**
திரு.K.நாராயணன் ரெட்டி, திருச்சி
94883 83053

**சிறப்பாசிரியர்**
திரு.M.V.வைத்திலிங்கம் ரெட்டியார்,
புதுச்சேரி
98431 33287

**ஆசிரியர்**
திரு.R.பட்டாபி ரெட்டியார், சென்னை
99417 25914

**இணை ஆசிரியர்கள்**
திரு.G.கிருபாகரன் ரெட்டியார், திண்டிவனம்
94433 55481
திரு.J.நேமிதாஸ் ரெட்டியார், சென்னை
94449 30369

**ஆலோசனை குழு**

**முதன்மை ஆலோசகர்:**
திரு.N.கிருஷ்ணமூர்த்தி ரெட்டி,
வழக்கறிஞர், வேலூர்
96290 06727

திரு.P.R.நரசிம்மன் ரெட்டியார்,
சென்னை
98840 20039

திரு.R.பட்டாபிராமன் ரெட்டியார்,
மதுரை
93441 59399

திரு.M.V.ராமதாஸ் ரெட்டியார்,
சென்னை
94444 13142

திரு.S.முத்துகிருஷ்ண ரெட்டியார்,
சென்னை
805620 2324

திரு.Dr.V.ஜனார்த்தன ரெட்டி,
கோயம்புத்தூர்
94422 55311

திரு.Ln.Dr.Y.V.S.ரெட்டி, ஓசூர்
94432 07799

திருமதி.Dr.R.அனிதா சாந்தகுமார்,
பாண்டிச்சேரி
96003 86736



**பதிப்பாளர்**
டேக்பான் ரெட்டி நலச்சங்கம்
24, பிரதான சாலை, சித்தன்குடி,
பாண்டிச்சேரி - 605013

**வடிவமைப்பு:**
சக்தி கிரியேட்டர்ஸ்,
98410 25280

**இதழ் ஆக்கம்:**
செல்வமுத்துக்குமரன்




*அன்பு சொந்தங்களே! வணக்கம்!*
*நலம்.. நலம் நாட நாட்டம்!*

**ந**மக்கு நாம்! நாடு நமது!

தங்களை இந்த இதழ் மூலம் மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்!

ஏப்ரல் 2023 இதழிற்கு தங்களின் பாராட்டுதலுக்கும் ஆலோசனைகளுக்கும் மிக்க நன்றி!

இந்த இதழில் ஆன்மீகம், காவடிச் சிந்து, மருத்துவம், சமையல் குறிப்பு, சாதனையாளர்கள், டேக்பான் நிகழ்வுகள், திருமண தகவல் மையம், போன்ற பல செய்திகள் இடம் பெற்றுள்ளன. தாங்கள் அவற்றை வாசித்து தங்களின் கருத்துக்களை அனுப்பி வைக்கும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த இதழில் கேரள மாநிலம் அனைத்து கேரள ரெட்டி கூட்டமைப்பின் தலைவர் திருமிகு.பகவதி ரவீந்திரநாத் ரெட்டியாருடைய பிரத்தியேக நேர்காணலும் அவருடைய வாழ்க்கை குறிப்பும் இடம்பெற்றிருக்கிறது. திருமிகு பகவதி ரவீந்திரநாத் ரெட்டியார் மீண்டும் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டமைக்கும் அவர்களுடைய நிர்வாகிகளுக்கும், நம்முடைய வாழ்த்துக்கள்!

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 23, 24, 25 ஆகிய தேதிகளில் நெல்லையில் நடைபெற்ற கருத்தரங்கை தொடர்ந்து, இந்த ஆண்டு டிசம்பர் 23, 24, 25 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற இருக்கின்ற ரெட்டி மகளிர் மற்றும் இளைஞர்களின் சர்வதேச கருத்தரங்கில் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

ஒரு செய்தியை தங்களுக்கு மீண்டும் நினைவூட்டுகிறேன். நமது சமுதாயத்தினர் வைத்திருக்கும் வணிக நிறுவனங்களின் மூலமாக ரெட்டி பண்பாடு இதழ் வளர்ச்சிக்கு விளம்பரங்கள் பெற்றுத் தாருங்கள். சந்தா விபரம் இந்த இதழில் உள்ளது. சந்தாவை செலுத்தி உதவுங்கள். உங்கள் ஆலோசனைகளை எங்களுக்கு தெரிவியுங்கள்.

நீங்கள் அனுப்பும் குடும்ப செய்திகள், கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஒளிப்படங்களோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்கள் பிரசுரிக்கிறோம்!

தொடர்ந்து பயணிப்போம்! இணைந்து சாதிப்போம்!

என்றும் அன்புடன்..
**ம.வெ.வைத்திலிங்கம் ரெட்டி**
வழக்குரைஞர்,
தலைவர் 'டேக்பான்' (ஆறு மாநில) ரெட்டி நல சங்கம்
98431 33287

# திருவெள்ளறை



### ஊர்ப் பெயர் காரணம்

திருவெள்ளறையில் உள்ள பெருமாள் கோயில் கோட்டை போன்ற வடிவத்தில் அமைக்கப் பட்டுள்ளது. பெரிய பிரகாரத்தின் தெற்குப் பகுதியில் கல் அறைகள் உள்ளது.

இங்கிருந்து ஒலி எழுப்பினால் அதன் எதிரொலி தெளிவாகக் கேட்க முடியும். இந்த கோவில் சுமார் 50 அடி உயரத்தில் வெள்ளை பாறையிலான குன்றின் மீது அமைந்துள்ளது.

வெள்ளை பாறையின் மீது அமைந்துள்ளதால் இது வெள்ளறை என்று பெயர் பெற்றது. இது பாடல் பெற்ற ஸ்தலம் ஆனதால் திருவெள்ளறை ஆயிற்று.

### வரலாறு

பகவான் இந்த ஆலயத்திற்கு வந்து 64 சதுர்யுகம் ஆகிவிட்டது என்கிறது தல வரலாறு. கங்கை, யமுனை, கோதாவரி போன்ற நதிக்கரையில் வாழ்ந்த சுமார் 3 ஆயிரத்து 700 வேதம் ஓதுக்கூடிய அந்தணர்களை சிபி சக்ரவர்த்தி இங்கு அழைத்து வந்து குடியேற்றினார். அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுத்து பெருமாளுக்கு சேவை செய்யப் பணித்தார்.

முற்கால சோழர் ஆட்சி காலத்தில் உறையூர், அவர்களின் புகழ்பெற்ற தலைநகரகமாக விளங்கியது. அவர்களின் ஆட்சி காலத்தில்



புராண காலத்தின் தொடர்ச்சியாக அமைந்த இந்த ஆலயம் மிகச் சிறந்த திருப்பணிகள் மூலம் சிறப்புப் பெற்று விளங்குகிறது.

உய்யக்கொண்டான் அவதாரம் செய்த இடமாகவும் இந்த திவ்ய தேசம் விளங்குகிறது. நடத்தூர் அம்மனுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று புகழ்மாலை பாடிய மகானான ஆழ்வான் பிறந்த புனிதமான இடமும் இதுதான்.

அதேபோல, மகான் ஸ்ரீ உடையவர் சில காலம் இங்கு வாழ்ந்திருக்கிறார்.

**புராணம்**

வைகுண்டத்தில் நாராயணனும் தாயாரும் உரையாடிக் கொண்டிருந்தபோது தாயார், பகவானிடம் அவரிடம் உள்ள அனைத்து அதிகாரமும் தனக்கு வேண்டும் என்று கேட்டார்.

அதற்கு பகவான் சரியான தருணம் வரும் போது அதைத் தருவதாக வாக்களித்தார். காலங்கள் நகர்ந்தன.

இந்த பூவுலகத்தில் அயோத்தியை தலைநகரமாகக் கொண்டு சிபி சக்ரவர்த்தி என்ற மன்னன் ஆட்சிபுரிந்தான்.

அவன் தன் படை பரிவாரங்களுடன் தென் திசை நோக்கி வந்து இந்த திருவெள்ளறையில் தங்கி இருந்தான்.

அந்த சமயம், படைவீரர்கள் முன்பு தோன்றிய வெள்ளை நிறப் பன்றி ஒன்று அவர்களுக்கு தொந்தரவு கொடுத்தது. அதனால் கோபம் அடைந்த படைவீரர்கள் அதனை பிடிக்க துரத்தினார்கள்.

ஆனால் அந்த பன்றி யார் கையிலும் பிடிபடவில்லை. அதனால் சிபி சக்ரவர்த்தி, தானே அந்த பன்றியைப் பிடிக்க துரத்திக் கொண்டு சென்றார்.

ஆனால் அந்த பன்றியோ, யார் கையிலும் சிக்காமல் ஒரு புற்றினுள் சென்று மறைந்து விட்டது. அதனைக் கண்டு ஆச்சரியப்பட்ட மன்னன், அருகில் தவம் செய்து கொண்டிருந்த மார்க்கண்டேய மகரிஷியிடம் நடந்ததைக் கூறினார்.

அதற்கு மார்க்கண்டேய மகரிஷி நீ கண்டது பகவானின் வராக அவதாரம் என்று சொன்னார். அதைக் கேட்டு அதிசயித்த மன்னன், பன்றி மறைந்த புற்றுக்கு பாலால் அபிஷேகம் செய்து வணங்கி நின்றான்.

அப்போது பகவான் நின்ற திருக்கோலத்துடன் சிபி சக்ரவர்த்திக்கும் மார்க்கண்டேயருக்கும் காட்சி அளித்தார்.

திருமகளிடம் பகவான், “நீ கேட்ட அனைத்து அதிகாரத்தையும் உனக்கு நான் இங்கு தந்து விட்டேன். உன் விருப்பப்படியே இந்த திவ்ய





தேசத்தில் நீயே அதிகாரம் படைத்தவளாக திகழ்வாய்'' என்றார்.

இங்கு பகவான் அர்ச்சாருபமாக நின்று கொண்டு பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். மற்றபடி அருள்பாலிக்கும் அனைத்து அதிகாரமும் தாயார் திருமகளிடமே உள்ளது.

## கோயில் அமைப்பு

இங்குள்ள பெருமாளைத் தரிசிக்க 18 படிகளை கடக்க வேண்டும். இவை கீதையின் 18 அத்தியாயங்களைக் குறிப்பதாக தலபுராணம் சொல்கிறது.

அடுத்த கோபுர வாயிலில் 4 படிகள் உள்ளது. இவை நான்கு வேதங்களைக் குறிக்கிறது. அதன் பின் பலிபீடத்தை வணங்கி ஐந்து படிகளைக் கடக்க வேண்டும். இவை பஞ்சபூதங்களை குறிக்கிறது. பிறகு சுவாமியை தரிசிக்க இரண்டு வழிகள் உள்ளது. முதல் வழி தட்சிணாயணம், ஆடி முதல் மார்கழி வரை திறந்திருக்கும்.

இரண்டாவது வழி உத்தராயணம். தை முதல் ஆடி வரை திறந்திருக்கும். இத்தல பெருமாள் கிழக்கு பார்த்த நின்ற திருக்கோலத்தில் உள்ளார்.

## இலக்கியம்

இந்தப் புண்ணிய திவ்ய தேசத்தை பெரியாழ்வார் 11 பாசுரங்களாலும், திருமங்கையாழ்வார் 13 பாசுரங்களாலும் மங்களாசாசனம் செய்துள்ளனர். வைணவ சமயத்தை வளர்த்த வேதாந்த தேசிக சுவாமிகள் தனது ஹம்ஸ சந்தேசத்தில் இந்த திவ்ய தேசத்தை மங்களாசாசனம் செய்துள்ளார்.

## மூர்த்தி

இங்குள்ள மூர்த்தி புண்டரிஹாசன் என்னும் செந்தாமரைக் கண்ணன், நின்ற திருக்கோலத்துடன் அருள்பாலிக்கின்றார். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் காட்டுகிறார். உற்சவ பெருமாளாக திருவரங்க நம்பெருமாள் இங்கு அருள்பாலிக்கின்றார்.

தாயார் செண்பகவல்லிபங்கையசெல்வி தனிக்கோயில் பெற்று நாச்சியார் சன்னதியில் உள்ளார். உற்சவ தாயாருக்கு பங்கஜவல்லி என்ற திருநாமம் உள்ளது.

## ஸ்தலம்

இந்த திருக்கோயில் நான்காவது திவ்ய தேசமாக வைத்து போற்றப்படுகிறது. இந்த ஆலயம் திருவரங்கம் முற்பட்டதாக சொல்லப் படுகிறது. கோயிலுக்கும் அதனால் இந்தத் திருத்தலம் ஆதி வெள்ளறை என்றும் போற்றப் படுகிறது. இந்த ஸ்தலத்தின் புராணப் பெயர் ஸ்வேதகிரி என்றும் விமானம் விமலாக்ருதி விமானம் என்றும் போற்றப்படுகிறது.

SMV

# SMV GROUP

## KOLLAM - KERALA

M/s. SMV (Firm), Kollam
M/s. Sreenivas Fabricsi Kollam
M/s. Vasanth & Co., Kollam
M/s. SMV Associates, Kollam
M/s. SMV Apparesal, Kollam
M/s. Transworld Textiles, Kollam
M/s. Kalpaka Financial Enterprieses, Kollam
M/s. Sreenivas, Kollam
M/s. Kavitha Traders, Kollam
M/s. SMV Associates, Kollam
M/s. Vasanth & Co., Thiruvananthapuram
M/s. Transworld Textils, Thiruvanthapuram
M/s. Vasanth & Co., Kottayam
M/s. Transworld Textiles, Chennai
M/s. Vasanth & Co., Mumbai
M/s. J.N. Trust, Kollam
M/s. Transworld Textiles, Mumbai
M/s. Transworld Textiles, Ahmedabad
M/s. Transworld Textiles, Surat

## விருட்சம்

இந்த ஆலயத்தில் புனித விருட்சமாக வில்வ மரம் விளங்குகிறது.

## தீர்த்தம்

வெள்ளைப் பன்றியின் உருவத்தில் வந்த பகவான் திருக்காலடிகள் பட்ட ஏழு இடங்களும் ஏழு தீர்த்தங்களாக விளங்குகின்றது. அவை திவ்யகந்த தீர்த்தம், மற்ற கரபுஷ்கரணிகள், குச, சக்கர, புஷ்கல, பத்மவராஹ மணிகர்ணிகா ஆகிய தீர்த்தங்களாகும்.

## திருவிழாக்கள்

இங்கு சித்திரை மாதம் கோடைத் திருநாளாக சித்ரா பவுர்ணமியும், கஜேந்திர மோட்சமும் நடைபெறும் ஆவணி மாதம் ஸ்ரீஜெயந்தி உறியடி உற்சவமும், பங்குனி மாதம் திருவோண நட்சத்திரத்தில் பிரமோற்சவமும் நடைபெறும் பூஜைகள்





இத்தலத்தில் பலிபீடமே மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. பலி பீடத்தின் முன் தங்கள் கோரிக்கை நிறைவேற வேண்டிக் கொண்டால் அது நிச்சயம் நிறைவேறும் என்பது நம்பிக்கை. வேண்டுதல் பூர்த்தியானதும் பக்தர்கள் பலிபீட திருமஞ்சனம் செய்து பொங்கல் படையல் செய்து பிரார்த்தனை நிறைவேற்றுகிறார்கள்.

## வழிபடுவதால் ஏற்படும் பலன்கள்

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளில் இங்குள்ள தீர்த்தத்தில் நீராடி, பெருமாளுக்கு நைவேத்தியம் செய்த பொங்கலைச் சாப்பிட்டால் கண்டிப்பாக புத்திர பாக்கியம் கிட்டும் என்பது நம்பிக்கை.

இந்தத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் செந்தாமரைக் கண்ணனை தினமும் சேவித்தால் நாட்பட்ட தோல் வியாதிகள் குணமாகும்.

ராகு கேதுக்களினால் பாதிப்படைந்தவர்கள் அடிக்கடி விஷக்கடிக்கு ஆட்பட்டவர்கள் இங்கு வந்து பகவானை தரிசனம் செய்தால் பாதிப்புகள் நீங்கும்.

மன நிம்மதி இல்லாமல் தவிப்பவர்கள் மருந்துகளுக்குக் கட்டுப்படாத நோயால் துன்பப்படுகிறவர்கள், நல்ல வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு அவதிப்படும் பெண்கள் ஆகியோர் இத்தலத்துக்கு வந்து முறைப்படி பெருமாளைச் சேவித்தால் பாவங்கள் விலகும், குறைகள் தீரும்.

புண்டரீகாக்ஷனை தரிசனம் செய்யும் பாக்கியம் பெற்றவர்களுக்கு பிறவி கிடையாது என்பது பெரியோர் வாக்கு.

இங்கு வழிபட்டு பேறு பெற்றவர்கள் பெரியதிருவடி சிபி, பூதேவி, மார்க்கண்டேயர், லட்சுமி, பிரம்மருத்ராதிகள்.

## தனித்தன்மை

இந்த திவ்ய தேசத்தில் எழுந்தருளியுள்ள ஜீயர் சுவாமிகள் பங்கையர் செல்வி ஜீயர் என்று அழைக்கப்படுகின்றார்.

இப்படி தாயாரின் பெயரால் ஜீயர் சுவாமிகள் அழைக்கப்படுவது இத்திருத்தலத்தின் தனித்தன்மை ஆகும்.

மேலும், விஞ்ஞான அடிப்படையில் கோயில் கோட்டை போல அமைக்கப்பட்டுள்ளது, கோயிலில் பெரிய பிரகாரத்தில் தென்பகுதி.

## செல்லும் வழி

திருச்சியில் இருந்து துறையூர் போகும் சாலையில் 20வது கிலோ மீட்டரில் திருவெள்ளறை உள்ளது. திருவரங்கத்தில் இருந்து உத்தமர் கோவில் வழியாகவும் போகலாம்.

– தொடரும்

*With Best Compliments From*

House
044-25733297



Office
044-25734230
044-42034046

# MJF.Lion. G.VARADARAJAN REDDIAR

Lions Clubs International
Chairman
G.V.R. Groups - M/s G.V.R. Agencies
"G.V.R. Bhavan"
393, T.H. Road, Thiruvottiyur, Chennai- 600 019.

## Industrial Canteen Contractor

Canteen
**M/s. Carborandum Universal Ltd,**
Thiruvottiyur, Chennai - 600 019.

Canteen
**M/s. Royal Enfield India Ltd,**
Thiruvottiyur, Chennai - 600 019.

Canteen
**T.I Cycle of India,**
Ambattur, Chennai-600 058.

Canteen
**M/s. Esun Rerolls India Ltd,**
Hosur P.O.Krishnagiri Dt.

Canteen
**M/s. Esun MR Tap Changes,**
Thirunintravoor,P.O.,Thiruvalloor Dt.

Canteen
**M/s. Carborandum Universal Ltd,**
Sri Perumbudur P.O., Kancheepuram Dt.

# சாதனை முகங்கள் – 1

# பிரபஞ்சன் - நீட் தேர்வில் சாதனை!



ஆண்ட பரம்பரையாக இருந்த நம் ரெட்டி சமுதாயம் வருங்காலத்தில் ஆளப் போகும் பரம்பரையாகவும் மாறும் என்பதற்கு அத்தாட்சிகளில் ஒருவர் செல்வன் ஜே.பிரபஞ்சன்.

நம் ரெட்டி சமுதாயத்தைச் சேர்ந்த இவரின் சாதனையை பார் போற்றும் விதத்தில் செய்தி வேகமாக பரவி பட்டி தொட்டியெங்கும் பேசப்பட்டு வருகிறது. இவர் சாதனையை கேள்விப்பட்டு முதலில் சமூக ஊடகங்க ளில் பாராட்டி செய்தி வெளியிட்ட பெருமை டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்கத்தைச் சாரும்.

நமது நாட்டின் தலை நகரான புதுடெல்லியில் அமையப் பெற்றுள்ள உலக புகழ்பெற்ற AIIMS மருத்துவமனையில் சேர்ந்து மருத்துவம் பயிலப் போகும் செல்வன் ஜே.பிரபஞ்சனை, ரெட்டி சொந்தங்களோடு விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் அவர் இல்லம் தேடிச் சென்று டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச் சங்கம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்து அறுவை சிகிச்சை நிபுணராக வரவேண்டும் என்ற இலட்சியத்தோடு உள்ள செல்வன் ஜே.பிரபஞ்சன், வாழ்வில் உயர்ந்த இடத்தை அடைய ஆண்டவன் அருள் புரிய வேண்டியும் ஆசிகளை வழங்கி உயர் நிலைக்கு வாழ்வில் வரும் போது நம் இனத்தில் மிகவும் பின் தங்கியோருக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்ய சொல்லி அறிவுரையும் வழங்கினோம்.

செல்வன் ஜே.பிரபஞ்சனின் தந்தை ஜெகதீஷ் ரெட்டி. பூர்வீகம் செஞ்சி அருகே மேல்மலையனூர் கிராமம். மேல் ஒலக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் வரலாற்று ஆசிரியராக பணிபுரிகிறார்.

தாய் மாலா ரெட்டி. மாம்பழபட்டு அருகே உள்ள காங்கியனூர் பூர்வீகம். நெகனூர் அரசு மேல் நிலை பள்ளியில் கணித ஆசிரியையாக பணி புரிகிறார். தங்கை மேகவர்சிணி செஞ்சி சாரதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 9 ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

செல்வன் ஜே.பிரபஞ்சன் பத்தாம் வகுப்பு வரை செஞ்சி சாரதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் படித்து விட்டு +1, +2 சென்னை மேல் அயனம்பாக் கத்தில் உள்ள வேலம்மாள் வித்யாலயாவில் பயின் றுள்ளார். அப்போதே NEET பயிற்சிக்கு கடுமையாக உழைத்துள்ளார். அவரின் மனம் தளரா உழைப்புக்கு கிடைத்த பரிசு 720 க்கு 720 மார்க். மிகப்பெரிய வரலாற்று சாதனை. NEET எதிர்ப்பு என்ற ஒரே காரணத்திற்காக இவர் சாதனையை தமிழக அரசு சார்பில் எவ்வித பாராட்டும் தெரிவிக்காதது மிகப்பெரும் வேதனையாக உள்ளது.

நம் இனம் இவரை போன்று வரலாற்று நாயகர்களை உருவாக்கி நாளைய சமுதாயம் நமதே என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

இன்று 5.7.2023 ல் டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்க நிர்வாகிகள் செஞ்சிக்கு நேரில் சென்று பாராட்டியவர்களின் விபரம்: பொதுச் செயலாளர் வழக்கறிஞர் கிருபாகரன் ரெட்டி, நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அருப்புகோட்டை திரு.சந்திரபால் ரெட்டியார், கொள்ளார் திரு.பாபு ரெட்டியார், பெரப்பேரி திரு மேதாவி ரெட்டியார். டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்க தலைவர் திரு.எம்.வி.வைத்தியலிங்கம் ரெட்டி கைப்பேசி மூலம் வாழ்த்தினார்.

தகவல்: **ஜி.கிருபாகரன் –** பொதுச் செயலாளர்
டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்கம், திண்டிவனம்

*With Best Compliments from*



**Ln T.V. Raj MJF**

Vice president - Takepon Reddy Nala Sangam
Patron - Yogi Vemana Educational trust, Hosur
Distruict Chairperson - Lions Club
Secretary of Table Tennis Association,
Krishnagiri district

**No.3, Vidhya nagar, Hosur**
**Ph: 78068 03255**






# YOGI VEMANA MATRIC.HR.SEC.SCHOOL

8th K.M. Hosur - Bagalur Road,
Near Eluvapalli Bus Stop, Hosur, Krishnagiri Dt.



**Ln.G.Muni Reddy**
Chariman



**Ln.R.Srinivasa Reddy**
Secretary (Admin)



**G.KRISHNA REDDY**
Secretary (Active)



**N.PRAKASH REDDY**
Joint Secretary



**N.KRISHNA REDDY**
Treasure

Yogi Vemana Matriculation Hr Sec School was started in the year 2007 and is the unit of Yogi Vemana Educational and Welfare trust. The trust was ingrained by the Reddy community people of Hosu r and Denkanikotta Taluks. It was started with classes LKG TO VIII STD, but today we have classes till XII th STD .At present we do have strength of about 800 students. 700 students in matric stream and 100 students in CBSE STREAM.

Our main objective is to inculcate social moral ethical and spiritual values of education among students.we also aspire to nurture discipline, courage and excellence among our students.

I. To impart man making, character building education.
II. To bring out lalent, that is inherent in each child.
III. To build confidence and prepare the child to be multiple achiever
IV. To offer quality education to pupils of all communities without any discrimination at the least expenditure and without accepting any kind of donation from the parents. Proudly we are happy to say that we are producing 100°/o result in the Board Examination for the past 6 years.



# Sri Bhagavathy
## Traders Pvt Ltd.,



- Warehousing
- 3PL Service Providers
- Sales & Marketing

**Corporate Office:** P.V.Sreedharan Road,
Kumbalam PO., Cochin - 682506
0484 3083311, 98460 45205
info@sribhagavthy.com



*With best compliments*
*To grace the function sucess*

## Ln Dr Y.V.S. Reddy

Golden Jubilee social worker,
Adviser Takepon Reddy Nala Sangam

- Father of Hosur Lionism, projects: Adopted one Govt Hr sec school from 20 years now it is fully equipped modren co education school strength 1800 students.
- Developed one public walkers way 2 km with nearly one lakh trees with the support of Govt & public. project cost nearly 7crores.
- Developed Scouts & Guides training center in 5.5 acers at Hosur.
- Lions Eye Hospital free for all poor people in Hosur with the Support of club members & friends in one accer land.
- Project cost 4 crors other than land cost Nithya Annadasoha Bhavan at Anekal my kula dhaivam Thimmarayaswamy temple.
- project cost nearly 5crores with the support of trust & Devotees.
- Totall small projects from 52 years nearly 700 projects. Target 1000 projects in my life.

# HOTEL ARYAAS

## HIGH QUALITY PURE VEG.RESTAURANT

VILLIYANUR MAIN ROAD, REDDIYARPALAYAM, PUDUCHERRY – 605010.

ஆர்டரர்கள் எங்களிடம் குறித்த நேரத்தில்
டெலிவரி செய்யப்படும்

**PROP: T.REGUNATH**

**ALL PARTY ORDERS UNDERTAKEN WITH QUICK AND TIMELY DELIVERY.**





*With Best Compliments from*




# ஆதம்பாக்கம் ஜனோபகார சாஸ்வத நிதி லிமிடெட்

107/62, புதுப்பேட்டை தெரு, ஆலந்தூர்,
சென்னை - 600 016. தொலைபேசி : 044 - 2234 1794

---

# Adambakkam Janopakara Saswatha Nithi Limited

**107/62, Pudupet Street, Alandur,**
**Chennai - 600 016. Phone : 044 - 2234 1794**

**18.12.2006ல் பவழ விழா கண்ட நிறுவனம்**





திருமதி பத்மினி ரவீந்திரநாத்

**திரு. பகவதி ரவீந்திரநாத் ரெட்டியார்**

President A.K.R.F. , **கேரளா.** Vice president TAKEPON

# நம்முடைய பெருமை மிகுந்த கலாச்சாரத்தை நாம் இழந்து விடக்கூடாது!

**ரெ**ட்டியார்கள் இனம் ஸ்ரீ ராமபிரானின் வழித்தோன்றல் என்று வரலாறு கூறுகிறது. அயோத்தியில் இருந்து தெற்கு நோக்கி புலம்பெயர்ந்தவர்கள் ஆந்திராவில் தங்கி வசிக்கத் தொடங்கினர் பிறகு திருமலை நாயக்க மன்னருக்கு நம் இனத்தவர் விசுவாசமாகவும் நாணயம் தவறாதவர்களாகவும் நேர்மையானவர் களாகவும் நெஞ்சுறுதி மிக்கவர்களாகும் இருந்த தால், அவர் மதுரையை ஆட்சி செய்த போது பலர் பாளையக்காரர்களாகவும் தளபதிகளாகவும் படை வீரர்களாகவும் அரசின் ஆலோசகர்களாகவும் பணியமர்த்தப்பட்டனர்.

அவருக்குப் பின் நம்முடைய இனத்தவர் தென்திசை நோக்கி அதாவது திருநெல்வேலி

சீமையை நோக்கிக் குடி பெயர்ந்தனர். திருநெல்வேலி சீமை மூன்று பாகங்களாக பிரிக்கப் பட்டன. தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி என்று மூன்று மாவட்டங்களாக அவை பிற்காலத்தில் மாறின. இந்தப் பகுதியில் சிறு குறு கிராமங்களில் வசிக்கத் தொடங்கினர் நம்முடைய இனத்தவர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் குறிப்பாக நாங்குநேரி தாலுகாவில் ஏறத்தாழ ஐம்பது கிராமங்களில் நம்முடைய ரெட்டி இன மக்கள் பல்லாண்டுகளாக வசித்து வருகின்றனர். விவசாய குடிமக்களாகிய நம் முன்னோர் தங்கள் கிராமங்க ளில் பிற சமுதாய மக்கள் பாராட்டும் படியாக சமூக நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக சமூகரங்கபுரம், சீலாத்திகுளம், நக்கனேரி, பருத்திப்பாடு போன்ற கிராமங்களில் வாழ்ந்த நம்முடைய பெரியோர்கள், போதிய அளவு மழை இன்மையால், நிலத்தடி நீர் பற்றாக்குறை யால் விவசாயத்தை மட்டுமே நம்பி இராமல் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு அருகாமையில் உள்ள கேரள மாநிலத்திற்கு புலம்பெயர்ந்தனர். உண்மையையும் உழைப்பையும் விடாமுயற்சியை யும் கொண்டு பல்வேறு வாழ்க்கைத் தளங்களில் முன்னேற்றம் கொண்டனர்.

இன்று கேரளாவில் தொழில்துறைகளில் கோலோச்சி வருகிறது நம்முடைய ரெட்டி சமுதாயம்! அவ்வாறு தமிழ்நாட்டில் இருந்து கேரளாவுக்கு புலம்பெயர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்தான் திரு.பகவதி ரவீந்திரநாத் ரெட்டி அவர்கள்.

All Kerala Reddiars Federation அமைப்பின் தலைவராக இருக்கிறார். டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நல சங்கத்தின் துணைத் தலைவராக இருக்கிறார். கடந்த ஆண்டு கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் நடைபெற்ற டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்கத்தின் நிர்வாகக் குழு கூட்டத்தினை அவருடைய அமைப்பினரோடு சிறப்பாக நடத்திக் காட்டினார். கடந்த ஆண்டு டிசம்பர் 23, 24, 25 தேதிகளில் Reddy women and youth international convention என்ற மாநாட்டை திருநெல்வேலியில் சிறப்பாக நடத்திட பெரும் உதவி புரிந்து பாராட்டுக்களைப் பெற்றார். இரண்டு நிகழ்ச்சிகளையும் உலகம் முழுதும் உள்ள நம் ரெட்டி இன சொந்தங்கள்



மூத்த மகள் விமி, மருமகன் முத்துராஜ் உடன் பேத்திகள் செல்வி அபிராமி, செல்வி ஜெயஸ்ரீ.



இளைய மகள் நவமி, மருமகன் ஸ்ரீகாந்த் உடன் பேத்தி செல்வி நந்தனா தேவி.

கண்டு களிக்கும் வண்ணம் யூ ட்யூப் சேனல் வழியாக நேரலை ஒளிபரப்பு செய்ய வழி வகுத்தார். அவரோடு ரெட்டி பண்பாட்டுக்காக ஒரு சிறப்பு நேர்காணல்.

**உங்கள் பிறந்த ஊர் பால்ய காலத்தை பற்றி, குடும்பத்தை பற்றி பள்ளி வாழ்க்கை கல்லூரி வாழ்க்கை பற்றி கூறுங்கள் அய்யா!**

பிறந்த ஊர் சமூகரங்கபுரம் கிராமம். என்னுடைய தந்தையார் கே.வி.பகவதி ரெட்டியார். தாயார் திருமதி போலம்மாள். என்னுடன் பிறந்தவர்கள் நான்கு சகோதரர் கள். இரண்டு சகோதரிகள். அவர்கள்: ரங்கநாதன் ரெட்டியார், கங்காதரன் ரெட்டி யார், ராமநாதன் ரெட்டியார், ரவீந்திரநாதன் ரெட்டியார், சந்திர காந்த் ரெட்டியார், ரேணுகா

(அக்கா) பவானி (அக்கா). என்னுடைய தந்தையார் பிறந்த அந்த ஊரில் எங்களுடைய குடும்பம் நல்ல மதிப்பு மிக்கதாக இருந்தது. விவசாயம் சரியாக இல்லாத காரணத்தினால் தான் நாங்கள் புலம் பெயர்ந்தோம். எங்கள் கிராமத்தில் உள்ள பள்ளியில் பதினோராம் வகுப்பு வரை படித்தேன். பின்னர் திருநெல்வேலி டவுனில் உள்ள ஹிந்து கல்லூரியில் பி.யூ.சி படித்தேன் பியூசி முடித்த பின்பு திருச்சி நேஷனல் காலேஜில் என்னுடைய பி.எஸ்.சி டிகிரி முடித்தேன்.

**உங்கள் திருமண வாழ்க்கை, குழந்தைகள் பற்றி கூறுங்கள்..**

கல்லூரி படிப்பை முடித்த பின்பு கேரள மாநிலத்தில் கொல்லத்தில் முதல் முதலாக வந்து தங்கி இருந்தோம். என்னுடைய திருமணம் 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ஆம் தேதி நடைபெற்றது. என்னுடைய துணைவியார் பத்மினி ஆலப்புழையைச் சேர்ந்தவர். அவர் பி.எஸ்.சி படித்திருக்கிறார். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். ஒன்று விமி முத்துராஜ். இன்னொரு மகள் நவமி ஸ்ரீகாந்த். இவர்களின் குழந்தைகளாக எனக்கு மூன்று பேத்திகள் உண்டு!

**உங்கள் தொழில் வாழ்க்கை அனுபவங்கள் குறித்து..**

திருமணம் முடிந்த பின்பு 1984 ஆம் ஆண்டு எர்ணாகுளத்தில் வந்து நான் செட்டில் ஆகக் கூடிய ஒரு சூழ்நிலை உருவானது. நான் மேற்கொண்ட தொழில், கிளியரிங் அண்ட் ஃபார்வேர்ட் ஏஜென்சிஸ் அதாவது clearing and forwarding agency. Transportation logistics… அதில் ஓரளவுக்கு ஒரு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. என்னுடைய அலுவலகக் கிளைகள் கோயம்புத்தூர், திருச்சூர், கொல்லம், ஆலப்புழை, எர்ணாகுளம், கண்ணூர், மங்கலாபுரம் பாலக்காடு போன்ற நகரங்களில் இருக்கின்றன. இப்பொழுது என்னுடைய பெரிய மகளும் அவருடைய கணவரும் என்னுடன் இருந்து தொழிலை நிர்வாகம் செய்து வருகின்றனர். எனக்கு பெரும் உதவியாக இருக்கின்றனர்.

**நம்முடைய சமூக அமைப்புகளில் உங்களுடைய பங்களிப்பை பற்றி கூறுங்கள்?**

கொச்சின் ரெட்டி அசோசியேஷனில் 15 ஆண்டுகள் பிரசிடெண்டாக இருந்தேன். ஏ.கே.ஆர். எஃப் பிரசிடென்ட்டாக 2018 முதல் இப்போது வரை இருந்து பல சமுதாய நற்பணிகளை ஆற்றி வருகிறேன். மனிதனுக்கு கல்வியும், மருத்துவமும் மிக இன்றியமையாத தேவைகள் அதற்காக படிப்பு உதவி மருத்துவ உதவி ஆகியவற்றை பற்றிய விழிப்புணர்ச்சியும், உதவியும் என்னால் இயன்றவரை தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறேன்..

**மிகப்பெரியதொரு வாழ்க்கை அனுபவமும், தொழில் அனுபவமும் வாய்த்த மனிதராக இருக்கிறீர்கள். இன்றைய தலைமுறைக்கு நம்முடைய சமுதாயம் சார்பாக என்ன செய்திகளைச் சொல்ல விரும்புகிறீர்கள்?**

காலமாற்றத்திற்கு ஏற்றவாறு நாம் மாறவேண்டிய தேவை இருந்தாலும் நம்முடைய பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் நாம் இழந்து விடக்கூடாது அடுத்த தலைமுறைக்கு அதை பத்திரமாக கொண்டு சேர்க்க வேண்டும். உதாரணமாக பெண் ருதுவாகும் சடங்கு, திருமண சடங்கு நம்முடைய சமுதாயத்தில் முக்கியமான ஒரு பண்பாடு, நவீன நாகரிகத்தில் அந்த மரபு ரீதியான முறைகள் குறைந்து வருவது வருத்தமளிப்பதாக உள்ளது.

நம்முடைய சமுதாய கலாச்சாரம் என்பதுதான் நம்முடைய தலைமுறைகளின் தொன்மையான வேர்கள் வேர்களை இழந்து விட்டு மரங்கள் வளர முடியாது அதனால் வேகமாக மாறிவரும் நம்முடைய நவீன தலைமுறைக்கு நம்முடைய பண்பாடு, கலாச்சாரம், சடங்குகள், சம்பிரதாயங்கள் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லி அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு அவைகளை பத்திரமாக கொண்டு சேர்த்தால் தான் நம்முடைய இனம் தொடர்ச்சியாக பெருமை உடையதாக இருக்கும் என்று பணிவோடு சொல்லிக் கொள்கிறேன்! இதற்குரிய முன்னெடுப்புகளை எல்லா ஊர்களிலும் உள்ள நம் சமுதாய மகளிர் அமைப்புகள் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ■

# அனைத்து கேரள மாநில ரெட்டி கூட்டமைப்பின் நிர்வாகிகள் பட்டியல்

| S.NO | NAME | DESIGNATION | ADDRESS | MOBILE NO |
|---|---|---|---|---|
| 1 | MR. R.SANKAR REDDIAR | CHAIRMAN | C/o SRINIVASA FABRICS<br>TEXTILE DEALERS<br>MAIN ROAD, KOLLAM | 9387310021 |
| 2 | MR. B. RAMANATHA REDDIAR | VICE CHAIRMAN | General merchant,<br>Market road,<br>Changanacherry-686101. | 9349501500<br><br>98460 45205 |
| 3 | MR.B.RAVINDRANATHAN REDDIAR | PRESIDENT | 39/52144,SRI BHAGAVATHY<br>PANAMPILLY NAGAR,<br>ERNAKULAM-6825036 | |
| 4 | MR. S. RAMESH KUMAR REDDIAR | GENERAL SECRETARY | TMS Towers,<br>Paikkada Road, Kollam-691001 | 9447040673 |
| 5 | MR. R. JANARDHANAN REDDIAR | TREASURER | AIYAPPAS<br>TEXTILE DEALERS<br>MAVELIKARA | 9388866888 |
| 6 | MR.ANANDA KRISHNAN REDDIAR | VICE PRESIDENT | TC 25/1634,TRA 21<br>S.S.KOVILL ROAD,THAMPANOOR<br>TRIVANDRUM-695001 | 9995558677 |
| 7 | MR.P.VISHWANATHAN REDDIAR | VICE PRESIDENT | KAVU VEEDU,OPP.KARAPUZHA SCHOOL<br>KARAPUZHA, KOTTAYAM-686003 | 9447366676 |
| 8 | MR.R.SIVAKUMAR REDDIAR | VICE PRESIDENT | M/S .M.Renganatha Reddiar<br>Moolayil Buildings<br>Market Road<br>Changanacherry-686101 | 9446112000 |
| 9 | MR.S.SANKARA NARAYAN REDDIAR | VICE PRESIDENT | SHRISHTI,OPP. JYOTHI NIKETAN SCHOOL<br>SANADANAPURAM P.O<br>ALLEPPY -688003 | 9447022335 |
| 10 | MR.S. LEKSHMINARAYANAN REDDIAR | ORGANISING SECRETARY | 15 O DD PLATINUM PLANET,<br>PIPELINE ROAD<br>KALOOR, KOCHI -17 | 9447035124 |
| 11 | MR. V. BALAJI REDDIAR | SECRETARY | T.C 38/335(1),SCRA-5,<br>Valiasalai,,<br>Thiruvananthapuram -695036 | 9447587240 |
| 12 | MR. A.RAMAMOORTHY REDDIAR | SECRETARY | A.K GARDENS<br>HANEEFA COMPOUND<br>LEKSHMINADA, KOLLAM - 691 013 | 9447151071 |

டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்கம் மேற்கண்ட நிர்வாகிகளை வரவேற்று வாழ்த்தி மகிழ்கிறது.



# நீங்கள் சர்க்கரை நோயாளியா?

## சர்க்கரை நோய்க்கு ஒருங்கிணைந்த ஆங்கில மருத்துவ சிகிச்சை (Integrated) ஈஸ்ட் கோஸ்ட் சர்க்கரை நோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்



## ஸ்ரீ வித்யா குரூப் மருத்துவமனைகள்
## பாண்டிச்சேரி சர்க்கரை நோய் மையம்

எண்.4, 4வது குறுக்கு, அண்ணா நகர், பாண்டிச்சேரி,
போன் : 0413-2204647 செல் : 9487562930

**எங்கள் சேவை (Our Services)**

1. கருவறையில் உருவாகி கடைசி வரை நீடிக்கும் சர்க்கரை நோய்க்கான முழுமையான பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகள் பிரிவு (Total Diabetics Checkup & Consulting) ஒவ்வொரு நோயாளிக்கும் நோயறிவு கல்வி பயிற்சி, உணவு முறை ஆலோசகர் (Diabetes Dieticians & Educators) சர்க்கரை நோய் கல்வியாளர்கள் கம்ப்யூட்டர் ஒலி, ஒளி அமைப்புகளின் உதவியோடு பயிற்சி அளிக்கப்படுகிறது.
2. பாதம் பாதுகாப்பு ஆலோசனை மற்றும் பரிசோதனை பிரிவு (Foot Care Centre)
3. இதயம், சிறுநீரகம், கண்கள் பரிசோதனைகள் மூன்று மாத சர்க்கரை அளவு (HBA1c) அறிய சிறப்பு பரிசோதனை.
4. நோயாளிகள் மற்றும் குடும்பத்தினர்கள் பயன்பெற சர்க்கரை நோய் மாதாந்திர இலவச பயிற்சி முகாம்கள் (பிரதிமாதம் தோறும் இரண்டாவது சனிக்கிழமை பாண்டிச்சேரி அருகில்)
5. சர்க்கரை நோய் குடும்பத்தினர் படிக்க, பயன்பெற பயிற்சி பெற Dr.G. சந்தானம் எழுதிய "சர்க்கரை நோய் உணவுமுறை சிகிச்சை" நூல்.
6. உடல் மனவள பயிற்சி பிரிவு யோகாசனம், சகஜயோக தியானம் செயல்முறை பயிற்சிகள்
7. சர்க்கரை நோய் சந்ததியினருக்கு நோய் வருமுன் காக்க, வந்தபின் நோயின் தீய விளைவுகளான ஹார்ட் அட்டாக், கை, கால் பக்கவாதம், சிறுநீரக பாதிப்பு, கால்கள் பாதிப்பு, கண் பாதிப்புகள் இவற்றில் இருந்து தப்பிக்க எங்கள் சேவைகளை பயன்படுத்தி நலம் பெறுவீர்.
8. சர்க்கரை நோய் பற்றி விளக்கம் அறிய டயாபடிஸ் டயல் சர்வீஸ் போன் : 04364 – 222930. செல் : 94431 62930
9. டயாபடிஸ் ஸ்டோர் – மருந்துகள், ஈவோசோல் காலணிகள், உணவுமுறை கண்காட்சி, பரிசோதனை கருவிகள்.



**SRI VIDYA HOSPITAL**

**East Coast Diabetic Treatment and Research Centre**

**சர்க்கரை நோய்க்கென்றே இயங்கி வரும் முழுநேரக் கிளைகள்**

**சென்னை கோயம்பேடு சர்க்கரை நோய் மையம்**
பார்வை நேரம் - முதல் வாரம்
ஞாயிற்றுக்கிழமை **By Appointment**
எண்.100, முதல் தெரு, அவ்வை திரு நகர்,
கோயம்பேடு, கோயம்பேடு மார்க்கெட்
பின்புறம், சென்னை - 92.
செல் : 9443162930/ 9790072202

**மயிலாடுதுறை சர்க்கரை நோய் மையம்**
14, கச்சேரி ரோடு,
மயிலாடுதுறை – 609 001.
தொலைபேசி – (04264) 222930
கைபேசி – 94431 62930

Towards Excellence & Diabetes Care to the Rural Mass

**Dr. S. கோபிநாத்,** M.D., (Neuro endo), DNB, MHSC (Diab)
**Dr. G. சந்தானம்,** M.B.B.S., DD., D.Diab (AVS), Phd(Diab)
**Dr. G. வரலெட்சுமி,** M.B.B.S., DGO, Fellow, Adv USG, CINF

# டேக்பான் நிகழ்வுகள்!

**சென்னை**



24.05.2023 அன்று சென்னையில் நடைபெற்ற மதுரை ராஜேந்திரன், டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்கத்தின் மகளிர் பிரிவு தலைவி வழக்கறிஞர் திருமதி தேவசேனா இவர்களின் மூத்த மகன் திரு.வருண் ராஜா ரெட்டி அவர்களின் திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் தலைவர் எம்.வி.வைத்திலிங்கம், துணைத் தலைவர் பட்டாபிராம ரெட்டியார், ரெட்டி முரசு ஆசிரியர் கந்தசாமி, நல்லாசிரியர் முத்து கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.







கேரள மாநிலம் கொச்சின் மாவட்டத்தைச் சேர்ந்த அசோக் ரெட்டி – சித்ரா தம்பதியரின் மகள் டாக்டர் சுலேகா அவர்களுக்கும், தலச்சேரி சுனில்குமார் மற்றும் பிரித்தா அவர்களின் மகன் ஸ்ரீமந்த் அவர்களுக்கும் 3.7.2023 அன்று குருவாயூரில் திருமணம் இனிதே நடந்தேறியது. திருமணத்திற்கு டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்கம் சார்பாக ஆலோசகர் சங்கர் ரெட்டி, துணைத்தலைவர் ரவீந்திரநாத் ரெட்டி, வீரமணி ரெட்டி, சென்னை முத்துகிருஷ்ணன் ரெட்டி மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

# டேக்பான் நிகழ்வுகள்!

## திருச்சி





மூன்று மாநில ரெட்டி நலச்சங்க முன்னாள் தலைவரும், டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்க புரவலரும் (Patron) திருச்சி செவனா ஹோட்டல் அதிபருமான Rtn. K.நாராயணன் ரெட்டியார் B.A.,B.L., மகன் வழிப்பேரன் செல்வன் R. தனுஷ்க் B.E.,M.B.A., - R.அபினிக்கா B.com., (CA), (CMA) திருமணம், திருச்சி கருமண்டபம் S.P.S மஹாலில் 28.06.2023ல் நடைபெற்றது. 27.06.2023 இரவு நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியிலும், திருமண வைபவத்திலும் கலந்து கொண்டு மணமக்களை டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்க தலைவர் திரு.எம்.வி.வைத்திலிங்க ரெட்டியார், டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்க ஆலோசகர் சென்னை திரு.பி.ஆர்.நரசிம்மன் ரெட்டி, டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்க செயல் தலைவர் துறையூர் திரு.கே.ஆர்.இரவி ரெட்டி, டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச் சங்க துணைத்தலைவர் திரு.ஆர்.பட்டாபி ரெட்டியார், டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச் சங்க பொதுச்செயலாளர் – வழக்கறிஞர் திரு ஜி.கிருபாகரன் ரெட்டி, போகநாடு ரெட்டி நலச்சங்க முன்னாள் தலைவரும் தற்போதைய கௌரவ தலைவருமான திரு.வி.இராமதாஸ் ரெட்டியார், போகநாடு ரெட்டி நலச்சங்க துணைத்தலைவர் திரு.எல்.ஜனார்த்தன ரெட்டியார் முன்னாள் மூன்று மாநில ரெட்டி நலச்சங்கத்தின் இணை செயலாளர் லட்சுமி நாராயண ரெட்டி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு கே.என்.நேரு, உற்றார் உறவினர்கள், நண்பர்கள் திரளானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# டேக்பான் நிகழ்வுகள்!

## சென்னை








26.05.2023 அன்று சென்னையில் ஆனந்த் ஹோட்டலில் நடைபெற்ற டேக்பான் நிர்வாக குழு மற்றும் கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்த படி 2023 டிசம்பர் 23–25 தேதிகளில் ரெட்டி சர்வதேச மகளிர் – இளைஞர் தலைமைத்துவ கருத்தரங்கம் சென்னையில் நடத்துவது உறுதி செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து 04.06.2023 மாலை 4 மணிக்கு டாக்டர் C.M.K. ரெட்டி இல்லத்தில், பிரபல தொழிலதிபர் திரு.E.V.பெருமாள்சாமி ரெட்டி முன்னிலையில் டேக்பான் கவுன்சில் ஆலோசனைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

டாக்டர் C.M.K. ரெட்டி பரிந்துரையின் பேரில் ரெட்டி இனத்தின் மீது மாறா பற்று கொண்டவரும் ரெட்டி மக்களுக்கு மனமுவந்து சேவை செய்பவருமான மதிப்பிற்குரிய திரு.இ.வி. பெருமாள் சாமி ரெட்டிக்குச் சொந்தமான சென்னை, மணப்பாக்கத்தில் அமைந்துள்ள E.V. P.இராஜேஸ் வரி திருமண மண்டபத்தில் கருத்தரங்கம் நடத்த ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு – பாண்டிச்சேரி ரெட்டி சங்கங்களை உரிய அழைப்பு விடுத்து கூட்டாக Federation அமைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

சென்னையில் உள்ள ரெட்டி சங்கங்களுக்கு உரிய அழைப்பு விடுத்து கூட்டாக சென்னை மண்டலத்திற்கு மட்டும் தனியே ஒரு Federation அமைக்கவும் முடிவு செய்யப்பட்டது.



அகில இந்திய தெலுங்கு கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் C.M.K. ரெட்டி இல்லத்தில் வரலாற்றுச்சிறப்புமிக்க இக்கூட்டத்தை கூட்டிய மைக்கு நன்றி தெரிவித்து ரெட்டி சொந்தங்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

மனமுவந்து கருத்தரங்கை மணப்பாக்கத்தில் E.V.P. இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடத்த அனுமதி அளித்த திரு E.V.பெருமாள் சாமி ரெட்டிக்கு பலத்த கரகோஷத்துடன் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது. ஒற்றுமையின் அவசியம் குறித்து திரு.E.V. பெருமாள்சாமி ரெட்டி வலியுறுத்தி பேசியது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. மிகச்சிறந்த விருந்தோம்பலுக்கும் ஏற்பாடு செய்யபட்டிருந்தது.

சிறப்பு விருந்தினராக புதுவை எம்.எல்.ஏ. திரு.ஆர்.பி.அசோக்பாபு ரெட்டி கலந்து கொண்டு அரசியல் ரீதியாக நம் சமுதாயத்திற்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்வதாக உறுதியளித்தார்.

டாக்டர். C.M.K.ரெட்டிக்கு டேக்பான் ரெட்டி நலச்சங்க பொதுச்செயலாளர் ஜி.கிருபாகரன் ரெட்டி, பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். தலைவர் திரு.எம்.வி.வைத்தியலிங்கம் ரெட்டி, திரு.இ.வி.பெருமாள் சாமி ரெட்டிக்கு டாக்டர். C.M.K.ரெட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். கூட்டம் இனிதே நிறைவடைந் தது.



டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்க தலைவர் திரு.எம்.வி.வைத்தியலிங்கம் ரெட்டி, பொதுச் செயலாளர் திரு.ஜி.கிருபாகரன் ரெட்டி, மூத்த ஆலோசகர்கள் மதுரை திரு.ஆர்.பட்டாபிராம ரெட்டியார், சென்னை ஓ.பி.ஆர். பட்டாபி ரெட்டியார், திரு. எஸ்.முத்துகிருஷ்ணன் ரெட்டியார் மூத்த நிர்வாகிகள் திரு.வி.இரவிச்சந்திரன் ரெட்டியார், திரு.நேமிதாஸ் ரெட்டி, திரு.நரசிம்மன் ரெட்டியார், திரு.எம்.கே.இராமசுப்பு ரெட்டி, திரு.பி. நாகேந்திரன் ரெட்டி, திரு.எஸ்.இராஜகுமாரன் ரெட்டி, திரு.எஸ்.அப்பாசாமி ரெட்டி, திரு.வி.பாபு இராஜேந்திரன், திரு.கே.நமச்சிவாயம் ரெட்டி, திரு.ஆர்.சந்திரசேகர ரெட்டி – திரு.என். ஜெகதீசன் ரெட்டி உள்பட பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ■

# சாதனை முகங்கள் – 2

நிர்மல் கிராம புரஸ்கார் விருது பெற்ற

## சிந்தாமணி ராமசுப்பு ரெட்டி



திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தாலுக்கா, சிந்தாமணி கிராமத்தில் தெய்வத்திரு. சி.எம். கிருஷ்ணசாமி ரெட்டியார்–தெய்வத்திரு. திருமதி நாச்சியார் அம்மாள் தம்பதிக்கு மகனாக எம்.கே.ராமசுப்பு ரெட்டி பிறந்தார்.

ராமசுப்பு ரெட்டி, சிந்தாமணி கிராமத்தில் பத்து ஆண்டுகள் ஊராட்சி மன்றத் தலைவராக சிறப்பாக மக்கள் பணியாற்றி உள்ளார். முதல் முறை ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த போது, சிந்தாமணி கிராமத்தில் சுகாதாரப் பணிகள், பள்ளிக்கூடம் கட்டமைப்புப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றைத் திறம்படச் செய்து, மத்திய அரசின் ஜனாதிபதி விருதான 'நிர்மல் கிராம் புராஸ்கர்' விருதினை, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. ஜெயராம் ஐ.ஏ.எஸ் அவர்களின் திருக்கரங்களால் பெற்றுள்ளார். மீண்டும் சிந்தாமணி ஊராட்சி மன்ற தலைவராக வெற்றி பெற்று, தொடர்ந்து பொதுமக்களுக்கு பல்வேறு சமூக சேவைகளை செய்துள்ளார். சிந்தாமணி கிராமத்திற்கு, அரசாங்கத்தின் டாஸ்மாக் மதுபான கடை வர இருந்த நிலையில், பொதுமக்களின் ஒத்துழைப்போடு எங்கள் கிராமத்தில் மதுபான கடை நடத்த இடம் தர மாட்டோம் என்ற உறுதியான மறுப்போடு, டாஸ்மாக் இல்லாத கிராமமாக சிந்தாமணியை திகழச் செய்த பெருமை இவருடையது!

சிந்தாமணியில் 'தெய்வத்திரு ஈஸ்வரி அம்மாள் அறக்கட்டளை' மூலமாக ஏராளமான மரக்கன்றுகள் நடுவதற்கு பெரிதும் உதவி புரிந்துள்ளார். சுற்றுச்சூழல், சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை திறம்பட செய்து மத்திய அரசின் தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. கருணாகரன் ஐ.ஏ.எஸ் அவர்களால் தூய்மை கிராம விருதினை (CLEAN VILLAGE) பெற்றுள்ளார்.

மேலும் சிந்தாமணி, முனைஞ்சிப்பட்டி, கூந்தக்குளம் போன்ற பல்வேறு கிராமங்களில் சுமார் 5000 கால்நடைகள் பயன்பெறும் வகையில் டி.வி.எஸ் அறக்கட்டளையுடன் இணைந்து கால்நடை மருத்துவ முகாம் நடைபெற உதவி புரிந்துள்ளார். சிந்தாமணி, கூந்தக்குளம் கிராமங்களில் மரக்கன்றுகள் நடுவதற்கு உதவி புரிந்துள்ளார். டி.வி.எஸ் அறக்கட்டளையின் மூலம் சிறந்த சமூக சேவைக்கான விருது டி.வி.எஸ் அறக்கட்டளையின் தலைவர் திரு.வேணு சீனிவாசன் அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மனைவி ஆர்.ஜானகி. மகள் டாக்டர் நிரஞ்சனா எம்.டி.எஸ். மகன் ஆர்.ராம்குமார் பி. சி.ஏ ஆகியோர் ராமசுப்புவின் குடும்ப உறுப்பினர்கள்.

டேக்பான் ஆறு மாநில ரெட்டி நல சங்கத்தின் உறுப்பினராகவும் அகில இந்திய தெலுங்கு ஃபெடரேஷன் உறுப்பினராகவும் இருந்து நம்முடைய சமுதாய மேன்மைக்காக தொடர்ச்சியாக பங்காற்றி வருகிறார்!

சிந்தாமணி ராமசுப்பு ரெட்டியார் அவர்களின் மக்கள் பணி தொடரவும், அவர் இன்னும் பல்வேறு உயர் பதவிகளுக்கு உயரவும் டேக்பான் சார்பாகவும், ரெட்டி பண்பாடு இதழ் சார்பாகவும் வாழ்த்துகிறோம்! ■





உ
வைரவசாமி துணை





# R.வையப்ப ரெட்டியார் ஏஜென்ஸி

## மரக்கரி வியாபாரம்

- R.V.சாந்தி லாரி சர்வீஸ்
- R.V.சாந்தி டிப்பர் சர்வீஸ்
- R.V.சாந்தி எர்த் மூவர்ஸ்
- R.V.சாந்தி ப்யூல்ஸ்

விளாத்திகுளம், தூத்துக்குடி மாவட்டம்




R.V.வையனன் 95855 33165

R.V.செல்வக்குமார் 98421 44165

R.V.ராதாகிருஷ்ணன் 94431 34138

# Standard Associates

174, Kamaraj Salai, Saram, Pondicherry - 605 013.
E-mail : standardassociatespondy@gmail.com | Phone : 0413-2241134
Fax : 0413-2241297



Parryware Guru BATH FITTINGS Jaquar








Centrally located - walkable distance to Beach and Major attractions.

- 57 Centralised AC Rooms.
- Multi-cuisine Pure Vegetarian Restaurant
- 5 Banquet Halls with separate Dining facility (Capacity 30 to 400 Pax.)
- Ample parking space

There is a Surguru wherever you are in Pondicherry

SURGURU Restaurant
Mission Street, +91-413-4308083

SURGURU Restaurant
100ft Road, +91-413-4308088

SURGURU SPOT
Nehru Street, +91-413-4308084

SURGURU Restaurant
S V Patel Road, +91-413-4200201

HOTEL SURGURU
No.104, S. V. Patel Salai, Pondicherry – 605001. Phone: 0413-4200201
Email: booking@hotelsurguru.com Website: hotelsurguru.com


New born
Best of everything
a Baby needs
63, mission st,
Pondicherry-1
ph : 0413-2346389
36, Sringeri madam st,
100 ft road,
Pondicherry-13
ph : 0413-2205659

# QUALITY ENTERPRISES

269, Kamaraj Salai, Puducherry - 605 013.

✆ : 2241928, 2241638, 9894645668/5

e mail : qualitypuducherry@gmail.com


**Distributor :**

Jain Pipes™

Jain Drip™

Jain Plumbing™
Install peace of Mind!

Jain® Column Pipe
Your Lifeline to Prosperity.



KSB
Domestic Pump

QUALITY ARCADE
TILES & SANITARYWARE

No. 202, E.C.R. Road, Kokku Park Signal, Thattanchavady,
Puducherry - 8. E-mail: qualityarcade@gmail.com
Ph: 2244949, Mob. 98946 45660.

Kajaria
TRANSFORM YOUR WORLD

Kerovit

## MARUTHI SENIOR SECONDARY SCHOOL
## LAWSPET, PUDUCHERRY – 605 008
## A Unit of Maruthi Charitable and Educational Trust
## Affiliated to CBSE (2930027)

**Maruthi Charitable and Educational Trust** was established in the year 2000. Since then the trust was helping school children for preparing competitive examinations seeking admissions to various reputed national Institution, such as IIT, NIT, JIPMER, AIIMS, IISc, NISER, BITS etc., over this 22-years the trust has seen enormous number of students entering into such Institutions.


Since 2002 the Trust is running a school , at present it is under the name of Maruthi Senior Secondary School and affiliated to CBSE, with classes from LKG to XII Std.

The Trust also gives coaching for Students preparing for NEET and JEE.

Contact number : 0413 2199198 , 87549 22449


Email : maruthicbsc2020@gmail.com

Website: maruthischool2002.org



YOGI RAM INN
28,A.L.C. CAMPUS
Cuddalore.Ph (04142)220652,220653



# SUN PHARRMACY

E-mail: sunpharrmacy88@rediffmail.com

## Our Branches in Puducherry

1. No. 88, Cheety Street, Ph: 0413 - 2222359, 4209124, 88700 10000
2. No. 213, m.g. Road, Ph: 0413 - 2222358, 73977 69357
3. No. 399, Villaianur main Road, Near Nellithoppe Market, Pondy - 5. Ph: 0413 - 2201332, 73977 69360
4. Shasun Company Road, Opp. To. Pims Hospital, Ganapathychettykulam. Ph: 0413 - 2655349, 7397769360
5. No.2, Villaiianur Main Road, Reddiarpalayam, Pondy - 10. Ph: 0413 - 2293532, 7397769359

# எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலை. துணைவேந்தராக நாராயணசாமி நியமனம்

**எம்.**ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக துணைவேந்தராக நாராயணசாமியை நியமனம் செய்து ஆளுநர் ஆர்.என்.ரவி உத்தரவிட்டு உள்ளார்.

தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக் கழக துணைவேந்தராக டாக்டர்.நாராயணசாமி நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை ஆளுநர் பிறப்பித்துள்ளார். மருத்துவத் துறையில் 33 ஆண்டு காலம் அனுபவம் கொண்ட நாராயண சாமி 13 ஆண்டுகள் பல்வேறு அரசு மருத்துவக் கல்லூரிகளில் துறைத் தலைவராக பணியாற்றி உள்ளார். மேலும், பல்வேறு அரசு திட்டங்களில் ஒருங்கிணைப்பு அதிகாரியாக பணியாற்றியுள்ளார்.

தற்போது அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் முதல்வராக பணியாற்றி வருகிறார். முன்னதாக, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முதல்வராக இருந்தார். கொரோனா முதல் அலையில் கிண்டி கிங்ஸ் மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்



பட்டு, அரசு கொரோனா மருத்துவமனையின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் நாராயண சாமி நம் ரெட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவரை பண்பாடு இதழ் சார்பாகவும் டேக்பான் ஆறு மாநில ரெட்டி நல சங்கத்தின் சார்பாகவும் பாராட்டி மகிழ்கிறோம்! ■


**HOTEL ANANDA**

VEG RESTAURANTS




SINCE 1989 AT CHENNAI

- ★ **TEYNAMPET**
- ★ **MADIPAKKAM**
- ★ **AMBATTUR**
- ★ **R A PURAM**

(Canteens at: ANNA UNIVERSITY
NIIT, CHENNAI



## பக்தி இலக்கியம்

★ 'சிந்துக்கவி பேரரசு' அண்ணாமலை ரெட்டியார்



# காவடிச்சிந்து

தொடர் 04

## பாடலும் விளக்கமும்..

**பாட்டு – 5 முருகன் துதி**

### 01

**செந்தில் மாநகர் வாழ் கந்தநாதன் இரு**
**செய்ய பாத கஞ்சமே நமக்கு**
**உய்ய மேவு தஞ்சமே – இன்று**
**செப்பும் வார்த்தை கொஞ்சமேகேட்கத்**
**தீயபாதகு விரோத**
**மாயம்விட்டுத் திரும்புவாயே நெஞ்சமே**

**பதவுரை:**

செய்ய – சிவந்த, கஞ்சம் – தாமரை, உய்ய – கடைத்தேற, வாழ, தஞ்சம் – அபயம், அடைக்கலம்.

**பொழிப்புரை:**

திருச்செந்தில் மாநகர் வாழ் சுந்த நாதனின் சிவந்த திருவடிகள் இரண்டும் தாமரை மலர்களே. நாம் இப்பிறவியில் கடைத்தேற அடைக்கலம் புகுமிடம் முருகனது இணையடிகளே அவற்றை அடையும் வழி பற்றி ஏநெஞ்சே உனக்கு நான் இப்போது சொல்லுவது மிகக் கொஞ்சமே. அதைக் கேட்பாயாக. கொலை, களவு, சூது, பிறமாது நோக்குதல், மது அருந்துதல், யாரிடமும் பகைமைகாட்டல், மாயை ஆகிய தீய செயல்களை அறவே நீக்கிவிட்டு, ஏமடநெஞ்சே, முக்தி தரும் நன்னெறிக்குத் திரும்பு வாயாக.

**தெளிவுரை :**

**செய்யபாத கஞ்சமே:**

சிவந்த திருவடிகள் இரண்டும் தாமரை மலர்களே.

**திருவடிகள்:**

ஆசாபாசம் இரண்டும் அற்ற இடமே திருவடி. நான் என்ற அகப்பற்று அற்ற இடம் ஒரு திருவடி. எனது என்ற புறப்பற்று அகன்ற இடம் ஒரு திருவடி. ஆன்மாக்கள் அத்திருவடிகள் இரண்டையும் பற்றினால் மற்றைப் பற்றுகள் தாமாக விலகும்.

**உய்யமேவு தஞ்சமே:**

நாம் இப்பிறவியில் கடைத்தேற அடைக்கலம் புகுமிடம் ஆரும் முருகனது இணையடிகளே. தஞ்சம் புகுந்தார்க்கு முருகன் புரியும் கருணைக் கடல். மாரனை எரித்த கனல் விழியிலிருந்து ஞான சக்தியாக வந்தவன் குமரமூர்த்தி. அவனது திருவடிகளைச் சித்திப் போர்க்கே உய்யும் மார்க்கம் கிட்டும்.

**இன்பந்தந்தும்பர் தொழும் பதகஞ்சந்தந் தஞ்சமெனும் படி**
**என்றென்றுந் தொண்டு செயும்படி அருள்வாயே**

**– திருப்புகழ்**

**உமக்கு உய்வகை சொல்லுவன் பொன்**
**உன்னத அம்புரிசை வராசையுற்று உச்சிமிசை**
**சன்னதம் அம்புரி அன்பு ஆகித்தாள் தொழில் சார்வார்**
**மெய்யே**
**– கோமதி அந்தாதி – அண்ணாமலைக்கவிஞர்**

**ஐவரும் கைவிட்டு மெய்விடும் போதுன் அடைக்கலமே.**
**– சுந்தரலங்காரம் 84**

**நெஞ்சமே தீயபாதகம் விரோதம் மாயம்:**

**தீயபாதகம்:**

தீமையும் பாதகமும் விளைவிக்கும் கொடூரச் செயல்களே தீயபாதகமாம் கொலை, களவு, சூது, பிறமாது நோக்குதல்; மதி அருந்துதல் ஆகிய செயல்கள் பஞ்சமாபாதகங்கள் எனப்படும்.

ஐம்புலவேடரை அடக்காது அவர் வழிச் சென்றால் தீயபாதகம் விளைந்து விரைவில் கெடுவர். எனவே ஐம்புலன்களை அடக்கி ஆள்வதே உய்யும் நெறியாம்.

**விரோதம்:**

எவரிடமும் பகைமை காட்டாமை, பிறர் காட்டும் பகைமையைப் பொருட்படுத்தாமை, எவரும் யாதும்யானாக நோக்கும் பெருஞான நிலை ஆகிய பண்புகளைப் பெற்றுவிடில் உயர்வுயார் தாழ்வுயார் பகைவர் யார்? எல்லாம் தானே யாகி விடும் அந்த ஞானம் ஒவ்வொருவரிடமும் உண்டாகி விடின் இவ்வுலகமே ஒரு அமைதிப் பூங்காவாகத் திகழும்.

**மாயை:**

ஒன்றை மற்றொன்றாகக் காட்டும். துன்பத்தை இன்பமாகவும் நிலையில்லாதவற்றை நிலையான தாகவும் காட்டி நம்மை மயக்கும். காமத்தால் வெகுளியும் வெகுளியால் மயக்கமும் உண்டாகும் என்பது தெரிந்திருந்தும் மக்கள் மாயையில் சிக்கித் தளிக்கிறார்கள்.

**நில்லாதவற்றை நிலையின என்று உணரும்**
**புல்லறி வாண்மை கடை**

**– திருக்குறள் 331**

**காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய்**

**– திருக்குறள் 360**

**தீயான ஞான விநோதந்தனை என்று நீ அருள்வாய்**
**மாயா வினோத மனோதுக்கமானது மாய்வதற்கே**

**– திருப்புகழ்**

**திரும்புவாயே நெஞ்சமே:**

ஏமட நெஞ்சமே! தீயபாதகம், விரோதம், மாயை ஆகிய தீயவற்றை அறவே ஒழித்து விட்டு நன்னெறிக்குத் திரும்புவாயாக.

**நினைமின் மனனே நினை மின் மனனே**
**நெஞ்சே உனக்கு உபதேசமிதே.**

**– பட்டினத்தார்.**

**சீலத்தே மிக அன்புறாதே**
**காமக்குரோத வுலோபப் பூதவி**
**காரத்தே யழிகின்ற மாயா**
**காயத்தே பசுபாசத்தே சிலர்**
**காமுற்றேயுமதென்கொலோ**

**– திருப்புகழ்**

**நீ நாளும் நன் நெஞ்சே நினைவு கண்டாய் யாறறிவார்**
**சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே**
**பூநாளும் தலைசுமப்ப புகழ் நாமம் செவிகேட்ப**
**நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே**

**– ஞானசம்பந்தர்**

# 02

**பந்த பாசமிதை எந்த வேளையிலும்**
**பார்க்கும் போது தொல்லையே – அல்லால்**
**ஆர்க்கும் ஆவது இல்லையே – ஒரு**
**பார மேரு வில்லையே – கையில்**
**பற்றுநாதன்மாது பெற்ற**
**நீதன் மீது பனுவல் சூடு வல்லையே.**

**பதவுரை:**

பந்தம் – கட்டு, பாசம் – ஆசை, மேரு – மேருமலை, நீதன். உலக நீதிபரிபாலனம் செய்யும் முருகன், பனுவல் – கீர்த்தனை இசைநூல், வல்லை விரைவினில்,

**பொழிப்புரை:**

மனைவி மக்கள் உற்றார் உறவினர் சொத்து சுகம் என்பனவற்றின் மீது வைக்கும் பேராசையே பந்த பாசம் எனப்படும். பந்தபாசக் கயிற்றால் கட்டுண்டு கிடக்கும் மனித வாழ்வை எவ்வகை யானும் ஆராய்ந்து பார்க்குமளவில் அவ்வாழ்வு துக்கமும் துயரமும் நிறைந்ததாகவே உள்ளது. பந்தபாசக் கடலை நீந்திக் கடத்தல் என்பது யாருக்கும் ஆவதில்லை.

ஆனால் அது எவருக்கும் ஆகவுங் கூடும். எப்போது எனின் மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானின் தேவி உமையாள் உலகுக்கு அளித்த முருகப்பெருமான் மீது பக்திப் பனுவல் செய்து பணிந்து வணங்கி அப்பனுவல் பாமாலையைச் சூடுவாயெனில் பந்த பாசக்கடலை நீ கடக்க முடியும். விரைவில் செய்வாயாக.

**தெளிவுரை:**

**பந்தபாசம்:**

காமத்திலும் குரோதத்திலும் ஐம்பூத

வேறுபாட்டிலும் அழிகின்ற உடம்பிலும் மனைவி மக்கள் உற்றார் உறவினர் என்ற பற்றிலும் பகட்டுப் பொருள்களிலும் வைக்கின்ற பேராசையே பந்தபாசம் எனப்படும். பந்தபாச வலையில் சிக்கி மக்கள் அவதியால் தவிக்கிறார்கள்.

மனை மக்கள் சுற்றமெனு மாயா வலையைக் கடக்க அறியாதே.

**வினையிற் செருக்கி யடி நாயேன் விழலுக்**
**கிரைத்து விடலாமோ**

**– திருப்புகழ்**

**வளைப்பட்டகைம் மாதொடு மக்கள் எனும்**
**தளைப்பட்டு அழியத் தகுமோதகுமோ**

**– சுந்தரநுபூதி 4**

**அகம் மாடை மடைந்தையர் என்று அயரும்**
**சகமாயையுள் நின்று தயங்குவதே**

**– சுந்தரநுபூதி 5**

**சந்ததம் பந்தத் தொடராலே**
**சஞ்சலந்துஞ்சித் திரியாதே**
**சுந்தனென் றென்றுற்றுனை நாளும்**
**கண்டு கொண்டன்புற்றிடுவேனோ**

**– திருப்புகழ்**

துன்பங்களுக் கெல்லாம் மூலகாரணம் பற்றே. பற்று என்பது யான், எனது என இரு வகைத்து. அகப்பற்று புறப்பற்று இரண்டும் அற்ற இடமே முருகப்பிரானது திருவடிகள்.

**தொல்லைக் குடும்பத்து யரத்தை**
**தொலைத்தே னந்தோ.**

**– வள்ளலார்**

### அல்லால் ஆர்க்கும் ஆவதில்லையே:

அது ஒன்று இல்லாது பந்தபாசம் எனும் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்க யாருக்கும் ஆகாது. எது ஒன்று இல்லாது என்று கேட்பின் மேருமலையை வில்லாகக் கையில் பற்றியிருந்த நாதன் சிவபெருமானது தேவியார் உமாதேவி உலகுக்கு அருளிய திருமுரும் மீது பாக்கள் பாடி பனுவல் செய்து அப் பாமாலையை முருகனுக்கு சூட்டி வணங்கிப் பெற்ற அருள் இல்லையானால் பந்தபாசக்கடை கடக்க முடியாது. தெய்வப்புலவர் வள்ளுவரின் வாக்கைக் காண்க.

**அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது.**

**– திருக்குறன்**

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவ னடிசேரா தார்**

**– திருக்குறள்**

**ஆகும்:**

பத்தபாசக் கடலைக் கடக்க முடியும். யார் கடக்க முடியுமெனில் திருமுருகன் மீது பக்திப் பாடல்கள் பாடிப் பனுவல் செய்து அப் பாமாலையை அவனுக்குச் சூட்டி அவனது அருளைப் பெற்றவர் களே பந்த பாசக்கடலைக் கடக்க முடியும். அல்லால் ஆர்க்கும் ஆவதில்லையே.

**பறுவல் குடு வல்லையே:**

விரையினிலேயே முருகன் மீது பனுவல் சூடு வாயாக.

வல்லையே என்ற வார்த்தை உடன்பாட்டுப் பொருளில் வந்துள்ளது. எதிர்மறைப் பொருள் கொள்ளலாகாது.

## 03

**மங்கைமார்கள் இருகொங்கை துங்கமத**
**வாரணங்கொள் கும்பமே – முகம்**
**பூர்ணச்சந்திர விம்பமே – பட**
**மாசுண நிதம்பமே – தொடை**
**மாரவேள் அரசு மண்டபத்**
**தருகில் வைத்த இரண்டு கம்பமே**

**பதவுரை:**

கொங்கை – முலை, தனம், துங்கம் – உயர்வு, வாரணம் – யானை, கும்பம் – மத்தகம், விம்பம் – ஒளி, மாசுணம் – பாம்பு, நிதம்பம் அல்குல், பெண்குறி, மாரவேள் – மன்மதன், கம்பம் – தூண்.

**பொழிப்புரை:**

பருவ மங்கையரின் இரண்டு தனங்களும் மதயானையின் உயர்வான மத்தகம் போன்றவை. ஒளிவீசுகின்ற முகமோ பூர்ணிமைச் சந்திரன். அவளின் அல்குல் பாம்பின் விரிந்த படம் போன்றது. இரண்டு தொடைகளோ மன்மதனின் கொலு மண்டபத்தில் நிறுவபட்டுள்ள இரண்டு தூண்களை ஒத்தவை.

# 04

**செங்கை சூரியோதயங் குலாவமலர்**

| | |
|---|---|
| **சீதபத்ம** | **தளமே வாயில்** |
| **ஓதுசொற்கள்** | **குளமே – இதழ்** |
| **நிவ்யபொற்ப** | **வளமே என்று** |
| **சிந்தித்தால் குமரன் கந்தப்பாத மலர்** | |
| **சேர்வதெவ்வா** | **ருளமே** |

**பதவுரை:**

செங்கை – சிவந்தகை, குலாவு – எங்கும் பரவ, மலர் – விரிகின்ற, மலர்கின்ற சீதம் – குளிர்ச்சி, பத்மம் – தாமரைமலர், தளம்–இதழ், குளம் – சர்க்கரை, இதழ் – உதடு, திவ்யம் – அழகு, கந்தம் – வாசனை.

**பொழிப்புரை:**

பருவ மங்கையரின் சிவந்த கைகள் உதிக்கின்ற காலைக் கதிரவன் ஒளிக் கதிர்பட்டு மலர்கின்ற குளிர் தாமரை என்றும், வாய் மொழிகள் மதுரமான சுற்கண்டு என்றும், அழகிய சிவந்த உதடுகள் பொற் பவளம் என்றும், மனதில் எந்நேரமும் எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தால் ஏ நெஞ்சே! நீ குமரனின் திருவடி மலரை எவ்வாறு சேர முடியும்? சேர ஒருக்காலும் முடியாது. ஆதலால் பெண்ணாசையை அறவே விட்டுவிடு வாயாக. இதுவே மனமே உனக்கு உபதேசம்.

**தெளிவுரை:**

என்று சிந்தித்தால் குமரன் கந்தப்பாதமலர் சேர்வ தெவ்வாறு உளமே?

அவளது சிவந்தகைகள் மலர்ந்த தாமரையின் இதழ்கள் என்றும் வாய் மொழி மதுரமான வெல்லக்கட்டி என்றும் சிவந்த உதடுகள் அழகிய பொற்பவள மென்றும் மனத்தில் எந்நேரமும் எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டேயிருந்தால் தெய்வ மணம் கமழும் சுந்தப் பெருமானது திருவடி மலரை ஏ நெஞ்சே நீ எவ்வாறு அடைய முடியும்? ஒரு போதும் அடைய முடியாது என்றவாறு.

**பாலே அனைய மொழியார்தம்**
**இன்பத்தைப் பற்றி என்றும்**
**மாலே கொண்டு உய்யும் வகை**
**யறியேன் மலர்த்தாள் தருவாய்**

**– கந்தலங்காரம் – 41**

**பாலென்பது மொழி பஞ்சென்பது பதம் பாவையர் கண்**
**சேலென்பதாகத் திரிகின்ற நீ செந்திலோன் திருக்கை**
**வேலென்கிலை கொற்ற மயூர மென்கிலை வெட்சித் தண்டைக்**
**காலென்கிலை மனமே எங்ஙனே முக்தி காண்பதுவே.**

**– கந்தரலங்காரம் – 30**

பிறப்புக்கு விதை அவா. பெண் அவா திருவையும் தெளிவையும் அழிக்கும். உண்டால் மட்டுமே கொல்லும் நஞ்சு. காமநஞ்சு பார்த்தாலும் நினைத்தாலும் கொல்லும். தீயைக் காட்டிலும் காமத்தீ கொடியது. தீயானது உடம்பை மட்டும் சுடும். காமத்தீ உடலையும் உயிரையும் உள்ளத்தையும் சுடும். நீரினுள் மூழ்கினாலும் மலைமேலேறி ஒளிந்து கொண்டாலும் சுடும்.

**குளிப்பினுங் காமம் சுடுமே குன்றேறி**
**ஒளிப்பினுங் காமம் சுடும்**

**– நாலடியார்**

# 05

**வன்னிமான விழிமின்னவே கடையில்**

| | |
|---|---|
| **வக்ரதந்த** | **சங்கமே – கொண்ட** |
| **உக்ரதுங்க** | **சிங்கமே – என்ன** |
| **மறலிதூதர்** | **பொங்கமே – உற்று** |
| **வந்த வேளை நெஞ்சே** | |
| **கந்த வேளை நினை** | |
| **மருவுறாது** | **பங்கமே** |

**பதவுரை:**

வன்னி – தீ, மான – போன்ற, வக்ர – வளைந்த, தந்தம் பற்கள், சங்கமே கூட்டமே, தொகுப்பு, பங்கம் – ஆபத்து, தீங்கு, உக்ரம் – கோபம்.

**பொழிப்புரை:**

கண்கள் தீயாகச் சிவந்து மின்னவும் வளைந்த கொடூரமான வரிசைப் பற்களோடும் பயங்கரமான சிங்கத்தைப் போல எமதூதர்கள் உனது உயிரை இழுத்துச் செல்ல ஆவேசமாய் நெருங்கி வரும் அவ்வேளையில் ஏ மனமே கந்த வேளை நினைப்பாயாக. எமனால் எந்த ஆபத்தும் உன்னை அணுகாது. எமன் விலகிப் போய் விடுவான்.

**கருத்துரை:**

குமரக்கடவுளது தெரிசனை பட்டவர்களைக் கண்டால் இயமன் பிறகிட்டு ஓடுவன். நமனை அஞ்சுதல் என்பதை அடியார்கள் அறியார்.

**தெளிவுரை:**

**உக்ரதுங்கசிங்கமே என்ன மறலிதூதர் பொங்கமே உற்று**

**வந்தவேளை:**

கண்கள் தீயாகப் பிரகாசிக்கவும் கோரப்பற்கள் பயங்கரமான தோற்றத்தைக் கொடுக்கவும் ஒரு சிங்கம் போல எம்படகர்கள் உயிரைப் பற்றிக் கொண்டுபோக ஆவேசமாய் நெருங்கி வரும் அவ்வேளையில்

**நெஞ்சேகந்த வேளைநினை மருவுறாது பங்கமே:**

ஏ நெஞ்சமே! கந்தவேளை மனத்தில் நினைப்பாயாக. எமனால்:

எந்த ஆபத்தும் உன்னை அணுகாது. எமன் விலகிப் போய்விடுவான்.

**மலைபோல**
**கனைத்தெழும் பகடது பிடர் மிசைவரு**
**கறுத்த வெஞ்சின மறலி தனுழையினர்**
**கதித்தடர்ந் தெறிகயிறடு கதை கொடு பொருபோதே**
**கலங்குறுஞ் செயலொழிவற அழிவுறு**
**கணத்தி லென் பயமறமயில்முதுகினில் வருவாயே.**
**சுருத்து நைந் தலமுறு பொழுதளவை கொள்**

**– திருப்புகழ்**

**எரி மூண்டதன்ன**
**விழித்துப் புகையெழ பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றால்**
**கழுத்திற் சுருக்கிட் டிழுக்கு மன்றோ கவிகற்கின்றதே**

**– கந்தரலங்காரம் – 2**

**வெட்டுங் கடாமிசைதோன்றும் வெங் கூற்றன் விடுங்கயிற்றால்**
**கட்டும் பொழுது விடுவிக்க வேண்டும் கலாபமயூரத்தனே**

**– கந்தரலங்காரம் 65**

# 06

**சென்னிமாநக ரண்ணாமலைக்கவிஞன்**

| | |
|---|---|
| **தேசமெங்கும்** | **இசையே பெற** |
| **பேசுசந்தம்** | **இசையே – சற்றும்** |
| **தீர்ந்திடாத** | **நசையே – வைத்துச்** |
| **சேவலாளி பதம் ஆவலோடு பணி** | |
| **தினமும் நூறு** | **விசையே.** |

**பதவுரை:**

இசை – புகழ், இசை – இசைப்பாடல், நசை – ஆகை, விருப்பம், சேவலாளி – சேவற்கொடியான், பதம் – பாதம், பணி – வணங்கு.

**பொழிப்புரை:**

சென்னி மாநகரில் பிறந்து வாழ்ந்த அண்ணாமலைக் கவிஞன் நான் இத்தேசமெங்கும் புகழ் பெற்றிருப்பதற்கு ஆதாரமாய் விளங்குவது நான் பாடி உலகுக்கு அருளிய இனிய சந்தங் களிக்கும் சிந்துப்பாடல் காவடிச் சிந்தேயாகும். ஆசை சிறிதும் குன்றி விடாது.

காவடிச்சிந்துப் பாக்களை நாளும் பாராயணம் செய்து சேவற்கொடி யோனின் திருவடிகளை வழிபாடு செய்து வருவீராயின் காவடிச்சிந்தின் பயனாக முருகவேளின் அருள் மேவு பார்வை உங்கள் மீது படும். தீயபாதகம், விரோதம், மாயம் உங்களை விட்டு அகலும். எமபயம் உங்களை அணுகாது. நற்கதி அடைவீர்.

**தெளிவுரை:**

**தேசம் எங்கும் இசையே பெற பேசு சந்தம் இசையே:**

சென்னிகுளம் என்ற ஒரு சிறிய ஊரிலே பிறந்து வளர்ந்த அண்ணாமலைக் கவிஞன் நான் இத்தேசம் எங்கும் புகழ் பெற்றுத் திகழ்வதற்கு ஆதாரமாய் விளங்குவது நான் பாடி உலகுக்கு அருளிய சிந்துச் சந்தம் களிக்கும் இசைப் பாடல் காவடிச் சிந்தேயாகும்.

**சேவலாளி பதம் ஆவலோடு பணி:**

சேவலாக மாறிய சூரபன்மனை ஆட்கொண்ட ருளினார். சேவலைத் தனது வெற்றிக் கொடியாக வைத்துக் கொண்டமையால் திருமுருகனைக் கவிஞர் சேவலாளி என்றனர்.

**கோழிக்கொடியன் அடிபணியாமல் குவலயத்தே**
**வாழக்கருதும் மதியிலிகாள் உங்கள் வல்வினைநோய்**
**ஊழிற்பெருவலி யுண்ணவொட்டாது)**

**– கந்தரலங்காரம் 20**

**– தொடரும்**

# DHANALAKSHMI SRINIVASAN GROUP OF INSTITUTIONS

**Perambalur / Trichy / Chennai / Coimbatore**

Perambalur - 621 212, TamilNadu. Tel : 04328 220555,291255, 220554 / Email : dsgroups 1994@gmail.com

Medical / Engineering / Management Studies / Science & Humanity / Polytechnic / Nursing / Education / Teacher Training / Junior College



## WANT TO GO FURTHER ?

a degree course at Dhanalakshmi Srinivasan Group can take you far. We're ranked among the top ten in South India for Engineering, Science & Humanities

## DHANALAKSHMI SRINIVASAN Medical College & Hospital, Siruvachur,Perambalur



**Dhanalakshmi Srinivasan Engineering College,** (Perambalur)
**Srinivasan Engineering College,** (Perambalur)
**Dhanalakshmi Srinivasan College of Engg & Tech,** (Chennai)
**Dhanalakshmi Srinivasan College of Engineering,** (Coimbatore)
**Dhanalakshmi Srinivasan College of Engineering,** (Perambalur)
**Dhanalakshmi Srinivasan Institute of Technology,** ( Samayapuram,Trichy)
**Dhanalakshmi Srinivasan Institute of Research & Technology** (Perambalur)

Computer Science & Engineering
Electrical & Electronics Engneering

Aernautical Engineering
Civil Engineering
Electronics & Communication Engg
Mechanical Engineering

MBA/ MCA
Computer Science & Engg
Power Electronice & Drives
Applied Electronic
Embedded Syatems
Software Engineering

**27,000** Students study in our Institutions

**11,500** Students reside in 2250 rooms

**350 acres** Campus Speed over aesthetically landscaped with lush green environement











**Dhanalakshmi Srinivasan College Of Arts & Science For Women,** (Perambalur)
**Srinivasan College Of Arts & Science :,** (Perambalur)

### UG COURSES

B.A. English
B.Lit Tamil
B.Sc.Physics
B.Sc. Chemistry
B.Sc. Microbiology
B.B.A.
B.C.A.
B.Sc. Biochemistry
B.Sc. Comp. Science
B.Sc. Hotel Mgmt. & Catering Sci
B.Com.
B.Sc. Maths
B.Sc. Biochemistry
B.Sc. Information Tech

### PG COURSES

M.A. Tamil
M.B.A.
M.Sc. Biochemistry
M.Sc. IT
M.Sc. Physics
M.A. English
M.B.A.
M.Sc. Microbiology
M.Sc. Comp. Science
M.Sc. Biotechnology
M.Com. MSW
M.Bc. Maths
M.Sc. Chemistry
M.Sc. Bio-informatics
M.Sc. Organic Chemistry

**M.Phil Programmes :** Biotechnology / Chemistry / Commerce / Maths / Microbiology / Tamil

visit us for more information : www.dsgroups.org

**Shri A. SRINIVASAN**
Founder - Chaiman

# CAUVERY COLLEGE FOR WOMEN

Nationally Re-accredited with 'A' Grade (CGPA 3.37 Out of 4) by NAAC (2010 - 2015)

**(RUN BY REDDY EDUCATIONAL TRUST, TRICHY)**

**Recognised as per G.O. No. 1298 Dt. 1.10.1984**

**Affiliated to Bharathidasan University ACA/1 100/04 Dt.12.84**

**UGU Recognized under section 2(f) 12 (B) Dt. 11.12.2003**

**Annanmalai Nagar, Tiruchirappalli - 620 018. Ph : 2751232 / 2751234**

**Fax : 0431 - 2751234 E-mail : cauverycollege_try@rediffmail.com**

**Website : cauverycollege.ac.in**



## U.G

B.A. (Tamil, English)
B.S.W.
B.Com.
B.Com. (Computer Applications)
B.B.A.
B.Sc. (Maths, Physics, Chemistry, Microbiology)
B.Sc. (Biotechnology, Computer Science)
B.C.A. (Bachelor of computer Application)
Bachelor of Information Technology
Bachelor of Nutrition and Diabetics

## P.G

M.A. (Tamil, English)
M.Com
M.S.W.
M.Sc. (Mathematics, Physics)
M.Sc. (Chemistry, Microbiology)
M.Sc. (Food Service Management & Diabetics)
M.Sc. (Information Technology)
M.Sc. Computer Science
PGDCA

## RESEARCH

M.Phil (Commerce, Social Work, Computer Science)
Ph.D. (Social Work, Tamil, Commerce, Mathematics, Computer Science)


ஸ்ரீ சீதாலக்ஷ்மி திருமண மண்டபம் A/C
எண்.305, பூவை நெடுஞ்சாலை, மதுரவாயல், சென்னை - 95.
C.V.N.R.Nala Sangam Family Function Welcome To All 10th Year
800 பேர் அமரும் வசதி ❋ 200 பேர் உணவு அருந்தும் வசதி உள்ளது
நவீன சமையல் கூடம் ❋ குடி தண்ணீர் வசதி உள்ளது ❋ 10 A/C ரூம்கள்
லிப்ட் வசதி உண்டு ❋ கார் பார்க்கிங் ❋ டூ வீலர் நிறுத்தும் வசதிகள் உள்ளது
அனைத்து சுபகாரியங்களுக்கும் சைவம் மட்டும்
மேலும் விவரங்களுக்கு:
94446 06618 / 94443 33922.



TAGORE MATRIC.HR.SEC.SCHOOL
LEARN AND SERVE
CHENNAI-129
TAGORE MATRIC.HR.SEC.SCHOOL
(Recognised by Govt.of Tamilnadu)
Nanmangalam
PH : 044 - 2268 0369
PHYSICS LAB
COMPUTER LAB
KG.CHILD @ PLAY
OUTDOOR PLAY
J.NEMIDOSS
CORRESPONDENT
No.2/212, ELUMALAI SALAI,
NANMANGALAM, CHENNAI - 129.
Email ID : tagorematriculationschool@gmail.com
Website ID : www.tagorematric.com

# சத்தான சமையல்



★ **திருமதி ஜெயந்திமணி,** திண்டிவனம்



## முளைகட்டிய பாசிப்பருப்பு தோசை (பெசரெட்)

**தேவையான பொருட்கள்:** முளை கட்டிய பாசிப்பருப்பு – 2 கப், பச்சை மிளகாய் – 4, சீரகம் – அரை டீஸ்பூன், துருவிய கேரட் – 1, வெங்காயம் – 1, எண்ணெய் – உப்பு – 1 டீஸ்பூன்.

**செய்முறை:** பாசிப்பருப்பை 2 முறை நன்றாகக் கழுவிய பின் மீண்டும் தண்ணீர் சேர்த்து 8 மணி நேரம் ஊற வைக்கவும். ஊறிய பாசிப்பருப்பை ஹாட்பாக்ஸில் கொட்டி அதன் மேல் ஒரு ஈரத்துணியை மூடி ஹாட் பாக்ஸை மூடி வைக்கவும். 4 மணி நேரம் கழித்துப் பார்த்தால் நன்றாக முளை விட்டிருக்கும். முளை விட்ட பாசிப் பருப்பை மிக்ஸியில் சேர்த்து அதனுடன் பச்சை மிளகாய், சீரகம், உப்பு, 100 மில்லி தண்ணீர் சேர்த்து நைசாக அரைக்கவும்.அரைத்த மாவை ஒரு பாத்திரத்திற்கு மாற்றி நன்றாகக் கலக்கவும். அடுப்பில் தோசைக்கல்லை வைத்து சூடானவுடன், குறைந்த தீயிற்கு மாற்றி தோசை ஊற்ற வேண்டும். தோசை மேல் பொடியாக நறுக்கிய வெங்காயம், துருவிய கேரட் பரவலாக தூவ வேண்டும். பின்னர் அடுப்பை மிதமான தீயிற்கு மாற்றி 3–4 நிமிடம் வேக வைக்கவும். திருப்பி போட தேவையில்லை. சுவையான பெசரெட் தயார். இந்த தோசையுடன் தேங்காய் சட்னி சேர்த்து சாப்பிட சுவையாக இருக்கும்.

பாசிப்பருப்பு இரத்த சோகை வராமல் தடுக்கும். புரதச்சத்து அதிகம் உள்ளதால் உடல் எடையைக் குறைக்க உதவும். அதிலும் நாம் முளை கட்டி பயன்படுத்தும் போது அதன் நன்மைகள் பன்மடங்கு அதிகரிக்கும்.

## வரகு அரிசி கஞ்சி

**தேவையான பொருட்கள்:** வரகு அரிசி – 1 கப், வெங்காயம் – 1, பூண்டு பல் – 6, இஞ்சி – 1 (சிறிய துண்டு), பச்சை மிளகாய் – 2, தக்காளி – 1, பீன்ஸ் – 4, கேரட் – 1/2, புதினா இலை – 15, கொத்தமல்லி இலை, பட்டை (சிறியது) – 1, இலவங்கம் – 3, பிரிஞ்சி இலை – 1, நெய் – 1 ஸ்பூன், உப்பு – 1 ஸ்பூன்

**செய்முறை:** குக்கரில் நெய் ஊற்றி சூடானவுடன் பட்டை, இலவங்கம், பிரிஞ்சி இலை, வெங்காயம் சேர்த்து வதக்கவும். பின்னர் இடித்த பூண்டு, இடித்த இஞ்சி, பச்சை மிளகாய் சேர்த்து வதக்கிய பின் தக்காளி, பீன்ஸ், கேரட், உப்பு சேர்த்து வதக்கவும். பின்னர் 4 கப் தண்ணீர் சேர்த்து மூடி கொதிக்க விடவும். நன்றாகக் கொதிக்க ஆரம்பித்ததும் அரை மணி நேரம் ஊற வைத்த வரகு அரிசியையும், புதினாவையும் சேர்த்து குக்கரை மூடி இரண்டு விசில் வைத்து இறக்கவும். கொத்தமல்லி இலையைத் தூவி நன்றாக கிளறவும்.சுவையான வரகு அரிசி கஞ்சி தயார்.

வரகு அரிசியில் புரதச்சத்து அதிகம் உள்ளதால் உடல் எடையைக் குறைக்க உதவும். இந்த அரிசியில் நல்ல கொழுப்பு உள்ளதால் இதயத்திற்கு மிகவும் நல்லது. ■



TVS
J Kay TVS
Authorised Main Dealers For
TVS Motor Company Limited
D/182, 100 Feet Road, Ozhandai, Opp to R.T.O Office, Puducherry - 605 004.
Tel : 0413-2280756 / 2280757.
வகை வகையான வண்டிகள்....
விதம் விதமான வண்ணங்கள் ....
வாங்கிட தூண்டும் சலுகைகள் ...
புதிய அறிமுகம்
TVS RAIDER
THE WICKED RIDE
INTRODUCING THE ALL-NEW
TVS JUPITER 125
Zyada se bhi zyada












HOTEL RAM INTERNATIONAL

HOTEL RAM INTERNATIONAL,
398 ANNA SALAI, PUDUCHERRY – 605001
Ph: (0413) 2337230 – 35 & 4206600 – 03
Email: raminternationalhotel@gmail.com
www.hotelraminternational.com







## Hotel Abi Krishnaa

HOME AWAY FROM HOME

#1, 2, 3, 1st Cross, Pon Nagar Reddiarpalayam,
Pondicherry - 605010.
Cell: 93646 48400, 93646 48499 Ph: 0413 - 2206969
Email: info@abikrishna.com

### Facilities

- Luxuriously furnished suites room
- Running Hot & Cold Water
- Satellites TV channels
- Ample Car Parking
- All major Cards Accepted
- Banquets & Conferences Facilities
- Kamadhenu Veg Restaurant
- Laundry & Cleaners
- 24 Hours Front Desk
- CCTV Surveillance Camera

## Abi Krishnaa

Tiles & Sanitary Mart

NO.182 Villiyanur Main road,
Jawahar Nagar, Reddiyarpalayam,
Pondicherry - 605010
CELL: 9443257722 / 7373100211 / 7373100288

**TILES, FITTING & SANITARY WARES, PLYWOOD, MICA SHEET, KITCHEN SINK**

OUR BRANDS

Kajaria, RAK, SOMANY, Jaquar, KOHLER, ESSCO, Fine Plywood, MERINO LAMINATES, PRINCE Kitchen Sink

# NATIONAL ENGINEERING COLLEGE

(An Autonomous Institution - Affiliated to Anna University, Chennai)
K.R. NAGAR, KOVILPATTI – 628503
+91 9385976674 / +91 9385976684 / 04632 - 222502 www.nec.edu.in principal@nec.edu.in

39 Years of Academic Excellence 2022-2023

TNEA COUNSELLING CODE 4962

## COURSES OFFERED

### UG

- B.E. - Mechanical Engineering *
- B.E. - Electronics & Communication Engineering *
- B.E. - Computer Science and Engineering *
- B.E. - Electrical & Electronics Engineering *
- B.Tech. - Information Technology *
- B.E. - Civil Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science

### PG

- M.E. - Energy Engineering
- M.E. - Embedded Systems Technologies
- M.E. - Computer Science and Engineering
- M.E. - High Voltage Engineering
- M.Tech. - Information Technology (Information and Cyber Warfare)

## PLACEMENT UPDATES

For 2022 Batch
95% Placement

For 2023 Batch
500+ Offers
275+ Internship Offers
as on 05th January 2023

95% CONSISTENT PLACEMENT | 150+ COMPANIES | 625+ OFFERS | 15 LPA HIGHEST SALARY

## ON CAMPUS INDUSTRY

Mistral Solutions, Bangalore
Brimma Tech, USA



NEC Special Features

nirf Rank - 169
ARIIA 2021 Band - Excellent
DST - FIST Sponsored
K.R. Innovation Centre
NAAC A
NBA Accredited
NewGen IEDC DST, New Delhi

## FEW OF OUR PRESTIGIOUS RECRUITERS

amazon, TATA Consultancy Services, ZOHO, Cognizant, accenture, Infosys, HCL, VVDN, Tessolve, wipro, Data Patterns, Mistral, Brakes India Private Limited, Capgemini, Centizen, Elite, embedUR, vuram, Hexaware, Tech Mahindra

# Lakshmi Ammal Polytechnic College

(Approved by AICTE, New Delhi and Directorate of Technical Education, Tamil Nadu)
Ph: 04632 - 222506, 63819 20408 352lapc@gmail.com / principal@lapc.in www.lapc.in.

COURSES OFFERED

D.C.E. - Diploma in Civil Engineering | D.E.E.E. - Diploma in Electrical and Electronics Engineering | D.M.E. - Diploma in Mechanical Engineering
D.E.C.E. - Diploma in Electronics and Communication Engineering | D.A.E. - Diploma in Automobile Engineering

# K.R. College of Arts & Science

Ph: 04632 - 248 981, 222 981 principal@krcollege.net www.krcollege.net

COURSES OFFERED

UG B.A. - English B.Com. - Professional Accounting
B.Sc. - Computer Science, Bio Chemistry, Micro Biology & Mathematics

PG M.Sc. - Computer Science
M.Sc. - Micro Biology

# KR Kayaar Exports Private Limited

(Spinning Unit)
Railway Feeder Road, K.R.Nagar, Kovilpatti - 628 503, Thoothukudi Dist, Tamil Nadu, India
Ph: 04632-222510, 248258, 94425 38774 ttn_krgroup@yahoo.com, ttnkrgroup@gmail.com

★ டாக்டர் சுமதி வெங்கடேஷ்
நெல்லை ஸ்ரீ சக்தி பல்நோக்கு மருத்துவமனை



# பெண்களின் ஆரோக்கியம்

பெண்களின் ஆரோக்கியம் என்பது ஒட்டுமொத்த சுகாதாரப் பாதுகாப்பின் முக்கியமான அம்சமாகும், மேலும் பல மருத்துவ நிலைமைகள் குறிப்பாக பெண்களைப் பாதிக்கின்றன. மார்பக புற்றுநோய், கருப்பை புற்றுநோய், இரத்த சோகை மற்றும் ஒழுங்கற்ற மாதவிடாய் ஆகியவை பெண்கள் எதிர்கொள்ளும் பொதுவான உடல்நலக் கவலைகளில் சில. இந்த நிலைமைகள் ஒரு பெண்ணின் வாழ்க்கைத் தரத்தை கணிசமாக பாதிக்கலாம் மற்றும் உடனடி நோயறிதல் மற்றும் சிகிச்சை தேவைப்படுகிறது. இந்தக் கட்டுரையில், இவை குறித்து விரிவாக விவாதிப்போம்.

## மார்பக புற்றுநோய்:

2020 ஆம் ஆண்டில் 2.3 மில்லியன் புதிய ஆய்வுகள் கண்டறியப்பட்டதன் மூலம் உலகளவில் பெண்களிடையே மிகவும் பொதுவான புற்றுநோயாக மார்பக புற்றுநோய் உள்ளது. மார்பக திசுக்களில் உள்ள செல்கள் கட்டுப்பாடில்லாமல் வளர ஆரம்பித்து, கட்டி அல்லது கட்டியை உருவாக்கும் போது இது ஏற்படுகிறது. மார்பக புற்றுநோயின் அறிகுறிகளில் மார்பகம் அல்லது அக்குள் பகுதியில் ஒரு கட்டி, மார்பக அளவு அல்லது வடிவத்தில் ஏற்படும் மாற்றங்கள், முலைக்காம்பு வெளியேற்றம் அல்லது தலைகீழ் மாற்றம் மற்றும் சிவத்தல் அல்லது மங்கல் போன்ற தோல் மாற்றங்கள் ஆகியவை அடங்கும்.

மார்பக புற்றுநோய்க்கான சிகிச்சையில் ஆரம்பகால கண்டறிதல் முக்கியமானது, மேலும் பெண்கள் சுய பரிசோதனை செய்து, தொடர்ந்து மேமோகிராம் செய்து கொள்ள வேண்டும். சிகிச்சை விருப்பங்களில் அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிர்வீச்சு சிகிச்சை மற்றும் ஹார்மோன் சிகிச்சை ஆகியவை அடங்கும்.

## கருப்பை புற்றுநோய்:

கருப்பை புற்றுநோய் என்பது கருப்பையில் உருவாகும் புற்றுநோயாகும், இது முட்டைகளை உற்பத்தி செய்யும் பெண் இனப்பெருக்க உறுப்பு ஆகும். இது பெரும்பாலும் 'அமைதியான கொலையாளி' என்று குறிப்பிடப்படுகிறது, ஏனெனில் இது வெகுகாலம் பெரும்பாலும்

கண்டறியப்படாமல் போகும். கருப்பை புற்று நோயின் அறிகுறிகளில் வயிற்று வலி, வீக்கம், சாப்பிடுவதில் சிரமம் அல்லது விரைவாக நிரம்பிய உணர்வு மற்றும் சிறுநீர் அறிகுறிகள் ஆகியவை அடங்கும்.

கருப்பை புற்றுநோய்க்கான சிகிச்சையில் பொதுவாக அறுவை சிகிச்சை மற்றும் கீமோதெரபி ஆகியவை அடங்கும். கருப்பை புற்றுநோய்க்கான அதிக ஆபத்தில் உள்ள பெண்கள், சில மரபணு மாற்றங்கள் கொண்டவர்கள் ஆவர். கருப்பையை அகற்றுவதற்கான தடுப்பு அறுவை சிகிச்சையை பரிசீலிக்கலாம்.

**கருப்பை புற்றுநோய்:**

கருப்பை புற்றுநோய், எண்டோமெட்ரியல் புற்றுநோய் என்றும் அழைக்கப்படுகிறது, இது கருப்பையின் புறணியை பாதிக்கிறது. இது பெண் இனப்பெருக்க அமைப்பின் மிகவும் பொதுவான புற்றுநோயாகும். கருப்பை புற்றுநோயின் அறிகுறி களில் அசாதாரண பிறப்புறுப்பு இரத்தப்போக்கு, இடுப்பு வலி மற்றும் உடலுறவின் போது வலி ஆகியவை அடங்கும்.

கருப்பை புற்றுநோய்க்கான சிகிச்சை விருப்பங்களில் அறுவை சிகிச்சை, கதிர்வீச்சு சிகிச்சை மற்றும் கீமோதெரபி ஆகியவை அடங்கும். ஆரம்பகால கண்டறிதல் முக்கியமானது, மேலும் அசாதாரணமான யோனி இரத்தப்போக்கு ஏற்படும் பெண்கள் உடனடியாக மருத்துவரை சந்திக்க வேண்டும்.

**இரத்த சோகை:**

இரத்த சோகை என்பது உடலில் போதுமான இரத்த சிவப்பணுக்கள் அல்லது இரத்தத்தில் ஆக்ஸிஜனைக் கொண்டு செல்லும் புரதமான ஹீமோகுளோபின் இல்லாத ஒரு நிலை. இரும்புச்சத்து குறைபாடு, வைட்டமின் பி12 குறைபாடு அல்லது நாட்பட்ட நோய்கள் உட்பட பல காரணிகளால் இரத்த சோகை ஏற்படலாம். இரத்த சோகையின் அறிகுறிகள் சோர்வு, பலவீனம், மூச்சுத் திணறல், தலைச்சுற்றல் மற்றும் வெளிர் தோல் ஆகியவை அடங்கும்.

இரத்த சோகைக்கான சிகிச்சையானது அடிப்படைக் காரணத்தைப் பொறுத்தது மற்றும் இரும்புச் சத்துக்கள், வைட்டமின் பி12 ஊசிகள் அல்லது அடிப்படை நிலைக்கு சிகிச்சையளிப்பதற்கான மருந்துகள் ஆகியவை அடங்கும்.

**ஒழுங்கற்ற மாதவிடாய்:**

ஒழுங்கற்ற மாதவிடாய் என்பது மாதவிடாய் சுழற்சியின் நீளம் அல்லது மாதவிடாய் காலத்தில் ஏற்படும் இரத்தப்போக்கு அளவு ஆகியவற்றில் ஏற்படும் மாறுபாடுகள் என வரையறுக்கப்படுகிறது. ஹார்மோன் சமநிலையின்மை, பாலிசிஸ்டிக் ஓவரி சிண்ட்ரோம் (பிசிஓஎஸ்), தைராய்டு கோளாறுகள் மற்றும் சில மருந்துகள் உட்பட, ஒழுங்கற்ற மாதவிடாய்க்கு பல காரணங்கள் உள்ளன.

ஒழுங்கற்ற மாதவிடாய்க்கான சிகிச்சையானது அடிப்படைக் காரணத்தைப் பொறுத்தது மற்றும் ஹார்மோன் பிறப்பு கட்டுப்பாடு, மாதவிடாய் சுழற்சியைக் கட்டுப்படுத்த மருந்துகள் அல்லது அடிப்படை நிலைக்கான சிகிச்சை ஆகியவை அடங்கும்.

முடிவில், மார்பக புற்றுநோய், கருப்பை புற்றுநோய், இரத்த சோகை மற்றும் ஒழுங்கற்ற மாதவிடாய் ஆகியவை பெண்கள் எதிர்கொள்ளும் பொதுவான உடல்நலக் கோளாறுகளில் சில. இந்த நிலைமைகளை நிர்வகிப்பதற்கும் கடுமையான உடல்நல விளைவுகளைத் தடுப்பதற்கும் ஆரம்பகால கண்டறிதல் மற்றும் உடனடி சிகிச்சை முக்கிய மானது. வழக்கமான பரிசோதனைகள், ஸ்கிரீனிங் மற்றும் ஏதேனும் அறிகுறிகளுக்கு மருத்துவ கவனிப்பைப் பெறுவதன் மூலம் பெண்கள் தங்கள் உடல்நலம் மற்றும் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**கருப்பை புற்றுநோய்க்கான அதிக ஆபத்தில் உள்ள பெண்கள், சில மரபணு மாற்றங்கள் கொள்பவர்கள் ஆவர். கருப்பையை அகற்றுவதற்கான தடுப்பு அறுவை சிகிச்சையை பரிசீலிக்கலாம்.**

மகப்பேறியல் மற்றும் கர்ப்ப பராமரிப்பு ஆகியவை பெண்களின் ஆரோக்கியத்தின் முக்கிய அம்சங்களாகும், அவை சிறப்பு மருத்துவ கவனிப்பு தேவைப்படும். மகப்பேறியல் என்பது கர்ப்பிணிப் பெண்களின் மருத்துவ பராமரிப்பு, மகப்பேறுக்கு முந்தைய பராமரிப்பு, பிரசவம் மற்றும் மகப்பேற்றுக்கு பிறகான பராமரிப்பு ஆகியவற்றைக் குறிக்கிறது. இங்கு, மகப்பேறு மற்றும் கர்ப்பப் பராமரிப்பின் முக்கியத் துவத்தைப் பற்றி விவாதிப்போம்.

**மகப்பேறுக்கு முற்பட்ட பராமரிப்பு:**

மகப்பேறுக்கு முற்பட்ட பராமரிப்பு என்பது கர்ப்பிணிப் பெண்களுக்கும் அவர்களின் வளரும் கருக்களுக்கும் மருத்துவ பராமரிப்பு மற்றும் ஆதரவை உள்ளடக்கியது. இது தாயின் ஆரோக்கியம் மற்றும் கருவின் வளர்ச்சி மற்றும் வளர்ச்சியைக் கண்காணிக்க ஒரு மகப்பேறு மருத்துவர் அல்லது பிற சுகாதார வழங்குநரின் வழக்கமான சோதனைகளை உள்ளடக்கியது. மகப்பேறுக்கு முற்பட்ட பராமரிப்பு என்பது கர்ப்பகால நீரிழிவு அல்லது ப்ரீக்ளாம்ப்சியா போன்ற கர்ப்பத்தில் ஏதேனும் சாத்தியமான சிக்கல்களைக் கண்டறிவதற்கான சோதனைகள் மற்றும் திரையிடல்களை உள்ளடக்கியது.

ஆரோக்கியமான கர்ப்பத்தை உறுதி செய்வதற்கும், தாய் மற்றும் குழந்தை இருவருக்கும் ஏற்படும் சிக்கல்களின் அபாயத்தைக் குறைப்பதற்கும் வழக்கமான பெற்றோர் ரீதியான பராமரிப்பு அவசியம். கர்ப்பிணிப் பெண்கள் தங்கள் கர்ப்பம் முழுவதும் மகப்பேறுக்கு முற்பட்ட கவனிப்பைப் பெற வேண்டும், காலக்கெடு நெருங்கும் போது அடிக்கடி வருகை தர வேண்டும்.

**பிரசவம்:**

பிரசவம் என்பது ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் செயல்முறையாகும், மேலும் இது தாய் மற்றும் குழந்தை இருவருக்கும் ஒரு சவாலான மற்றும் தீவிரமான அனுபவமாக இருக்கும். தாய் மற்றும் குழந்தைக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான பிரசவ அனுபவத்தை உறுதி செய்வதில் மகப்பேறு மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதார வழங்குநர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

பிரசவத்தின் போது, மகப்பேறியல் நிபுணர்கள் மற்றும் சுகாதார வழங்குநர்கள் தாய் மற்றும் குழந்தையின் ஆரோக்கியத்தை கண்காணித்து வலி மேலாண்மை மற்றும் ஆதரவை வழங்குகிறார்கள். அவர்கள் எபிசியோடமி அல்லது அசிஸ்டட் டெலிவரி, ஃபோர்செப்ஸ் அல்லது தேவைப்பட்டால் வெற்றிடப் பிரித்தெடுத்தல் போன்ற முறைகளைச் செய்யலாம்.

**பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்பு:**

பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்பு என்பது பிரசவத்திற்குப் பிறகு தாய்மார்களுக்கான



மருத்துவ பராமரிப்பு மற்றும் ஆதரவை உள்ளடக்கியது. இது தாயின் உடல் மற்றும் உணர்ச்சி ஆரோக்கியத்தை கண்காணித்தல், மகப்பேற்றுக்கு பிறகான மனச்சோர்வின் அறிகுறிகளை சரிபார்த்தல் மற்றும் தாய்ப்பால் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தை பராமரிப்பு பற்றிய ஆதரவு மற்றும் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கியது.

தாயின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும், சாத்தியமான சிக்கல்களை முன்கூட்டியே கண்டறிவதற்கும் பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்பு முக்கியமானது. பிரசவத்திற்குப் பிறகு முதல் சில வாரங்களில் பெண்கள் பிரசவத்திற்குப் பின் கவனிப்பைப் பெற வேண்டும் மற்றும் அவர்கள் ஏதேனும் அறிகுறிகளை அனுபவித்தால் மருத்துவ உதவியை நாட வேண்டும்.

முடிவில், மகப்பேறியல் மற்றும் கர்ப்ப பராமரிப்பு ஆகியவை பெண்களின் ஆரோக்கியத்தின் இன்றியமையாத கூறுகள். மகப்பேறுக்கு முற்பட்ட பராமரிப்பு, பிரசவம் மற்றும் மகப்பேற்றுக்கு பிறகான பராமரிப்பு ஆகியவை ஆரோக்கியமான கர்ப்பத்தை உறுதி செய்வதற்கும் தாய் மற்றும் குழந்தை இருவருக்கும் ஏற்படும் சிக்கல்களின் அபாயத்தைக் குறைப்பதற்கும் முக்கியமானவை.

பெண்கள் தங்கள் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் மற்றும் கர்ப்ப காலத்தில் அல்லது பிரசவத்திற்குப் பிறகு ஏதேனும் அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும். ■

## சாதனை முகங்கள் – 3

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த முத்தமிழ் செல்வி



**செ**ன்னையைச் சார்ந்த என்.முத்தமிழ்ச் செல்வி ‘ஏசியன் டிரக்கிங் இன்டர்நேஷனல் நிறுவனம்’ மூலம் நேபாளம் தலைநகர் காட்மாண்டு வில் இருந்து புறப்பட்ட குழுவினருடன் இணைந்து உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் 8,848 மீட்டர் ஏறி சாதனை செய்ய திட்டமிட்டு சென்னையில் இருந்து புறப்பட்டு நேபாளம் சென்றார். நேபாள அரசின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்த எவரெஸ்ட் சிகரம் ஏறுதலில் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து ஏராளமா னோர் பங்கேற்றனர். முத்தமிழ்செல்வி எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை செய்ய தமிழ்நாட்டில் இருந்து தேர்வு செய்யப்பட்ட முதல் பெண்.

இவர் கடந்த ஏப்ரல் 2 ந்தேதி சென்னையில் இருந்து காட்மாண்டு சென்றார். ஏப்ரல் 5ந்தேதி கேம்பிற்கு பயணத்தை தொடங்கினார். ஏப்ரல் 19ந்தேதி லோபுச் பகுதி உயரத்தை (20075அடி 6119 மீட்டர் உயரம்) அடைந்தார். மே18ந்தேதி மவுண்ட் எவரெஸ்டுக்கு பயணத்தை தொடங்கி னார். மே23ந்தேதி மவுண்ட் எவரெஸ்ட் பகுதியை வெற்றிகரமாக அடைந்தார். உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த முத்தமிழ்செல்வியை தொலைபேசியில் தொடர்பு கொண்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மேலும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மற்றும் அரசு அலுவலர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். சென்னையைச் சார்ந்த என்.முத்தமிழ்ச்செல்வி எவரெஸ்ட் சிகரம் ஏறுதலில் பங்கேற்க நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு அரசு மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் முத்தமிழ் செல்வி கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் நிதியுதவியாக ரூ.10 லட்சத்திற் கான காசோலையினை 28.3.2023 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிலையில், சிகரம் ஏறுவதற்கு கூடுதல் நிதியுதவி தேவைப்படுவதால் மேலும் நிதியுதவி வழங்கிடுமாறு அமைச்சரிடம் மீண்டும் கோரிக்கை விடுத்தார். இதனை தொடர்ந்து தன்னார்வ அமைப்புகள் மூலம் கூடுதலாக ரூ.15 லட்சம் நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் ஆற்றிய சாதனைக்கும், பல தொண்டு நிறுவனங்களும், ரெட்டி சமுதாயத்தைச் சேர்ந்த பெண்மணி என்பதாலும் ரெட்டி சமூகத்தின ரும் உறுதுணையாக இருந்து உதவிகள் புரிந்து, பாராட்டி சிறப்பித்தது மேலும் சிறப்பாகும். ■

# மணமாலை

**திருமண வரன் தரும் மணமாலை பகுதியில் இடம்பெறும் தகவல்கள் தொடர்புடையவர்களின் சம்மதத்துடன் வெளியிடப்படுகிறது.**

| எண் | பதிவு எண் | பெயர் | படிப்பு | வேலை | சொந்த ஊர் | தொடர்பு எண் | பிறந்த வருடம் | நட்சத்திரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 727 | என்.ராமகிருஷ்ணன் (மறுமணம் சம்மதம்) | B.Sc., | விவசாயம் | மருதாடு கடலூர் | 98428 84797 | 22.05.1975 | ஹஸ்தம் |
| 02 | 766 | ஜே.கண்ணன் (மறுமணம் சம்மதம்) | D.Pharm., B.Sc., | வியாபாரம் | பின்னப்பூண்டி காஞ்சிபுரம் | 97510 81783 | 18.10.1975 | உத்திரட்டாதி |
| 03 | 1467 | எஸ்.சிவக்குமார் (மறுமணம் சம்மதம், குழந்தை இல்லாமல்) | +2 | கார் டிரைவர் | ஆழங்காத்தான் சிதம்பரம் | 99622 76979 | 14.02.1975 | பூரட்டாதி |
| 04 | 342 | பி.தேவகுமார் (மறுமணம் சம்மதம், குழந்தை இல்லாமல்) | B.Sc., | குமாஸ்தா | விழுப்புரம் | 90431 99676 | 21.05.1976 | விசாகம் |
| 05 | 662 | ஜி.விவேக் | D.E.C.E., B.B.A., | சென்னையில் வேலை | வெளியம்பாக்கம் திருவண்ணாமலை | 90805 20944 | 19.08.1976 | ரோகிணி |
| 06 | 380 | வி.ஆர்.உதய சங்கர் | B.B.A., | சேல்ஸ் மேனேஜர் | விக்கிரவாண்டி | 99409 17758 | 22.10.1976 | ஹஸ்தம் |
| 07 | 848 | கே.குமார் (மறுமணம் சம்மதம், குழந்தை இல்லாமல்) | B.Com., M.C.A., | மேனேஜர் | நடுகுப்பம் திருவண்ணாமலை | 88705 51700 | 25.12.1976 | அவிட்டம் |
| 08 | 912 | வி.ராஜா (மறுமணம் சம்மதம், குழந்தை இல்லாமல்) | Diploma | டி.வி. மெக்கானிக் | திருகண்டேஸ்வரம் கடலூர் | 99943 77579 | 05.06.1976 | பூரம் |
| 09 | 1042 | எஸ்.குமரன் (மறுமணம் சம்மதம், குழந்தை இல்லாமல்) | Diploma | குடிசை மாற்று வாரியம் (அரியலூர்) | புதுவை | 84898 71700 | 16.06.1976 | திருவோணம் |


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 458 | ஆர்.சசிகுமார் | B.Com., | விவசாயம் | வேலூர் | 94869 39598 | 09.01.1976 | ரேவதி |
| 11 | 594 | வி.சம்பத் | I.T.I., | அனந்தபுரம் வேலை | எதப்பட்டு | 97866 19380 | 22.11.1976 | அனுஷம் |
| 12 | 0625 | பி.சங்கர் | B.S.C., Maths | சென்னை வியாபாரம் | சென்னை | 99417 25194 | 01.10.1976 | பூராடம் |
| 13 | 654 | ஆர்.மோகன் | +2 | விவசாயம் | திட்டாலம் | 97518 43272 | 09.10.1976 | அஸ்வினி |
| 14 | 1250 | கே.ரமேஷ் | D.E.E.E., | கடை | மணியம்பட்டு விழுப்புரம் | 94439 87765 | 23.09.1976 | பூரம் |
| 15 | 19 | எஸ்.முத்துராம் (மறுமணம் சம்மதம்) | B.A., | அரசு வேலை | திருவண்ணாமலை | 76390 31392 | 02.08.1977 | பூரட்டாதி |
| 16 | 44 | ஏ.ராஜா | S.S.L.C., | விவசாயம் கேபிள் டி.வி. | பனையூர் திண்டிவனம் | 98434 49299 | 29.05.1977 | – |
| 17 | 122 | பத்மநாபன் (மறுமணம் சம்மதம்) | B.E., | வெளிநாடு விவசாயம் | கடலூர் | 96559 65669 | 15.09.1977 | அஸ்தம் |
| 18 | 532 | எல்.சங்கர் (மறுமணம் சம்மதம்) | +2 | நெட்டப்பாக்கம் (வேலை) | சூரக்குப்பம் | 81221 50039 | 18.05.1977 | கார்த்திகை |
| 19 | 461 | உதயகுமார் | M.Sc., P.H.D. | U.S.A. வில் வேலை செய்கிறார் | வேலூர் | 94430 99128 | 10.03.1977 | விசாகம் |
| 20 | 0534 | சந்தான கிருஷ்ணன் (மறுமணம் சம்மதம்) | B.S.C., | Date Entry Operator | புதுச்சேரி | 87789 06098 | 22.10.1977 | அவிட்டம் |

**மேலும் விபரங்களுக்கு:**

புதுவை பிரதேச ரெட்டி நலச்சங்கம்

0413 – 2201020

# கண்ணீர் அஞ்சலி




**செ**ன்னை கம்பன் கழக செயலரும், தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றவரும், காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், வேடந்தாங்கல் அடுத்துள்ள விநாயக நல்லூரை பூர்வீகமாக கொண்டவரும், 'இலக்கிய வீதி' புகழ் பெற்ற தமிழ் இலக்கிய அமைப்பின் நிறுவனரும், 250க்கும் மேற்பட்ட சிறுகதைகள், 17 குறு நாவல்கள் மற்றும் 15 நாவல்களை படைத்தவரும், 81 வயதான நம் இனத்தின் மிகச்சிறந்த இலக்கிய படைப்பாளி இலக்கிய வீதி இனியவன் 02.07.2023 ஞாயிறு இரவு சென்னையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பூத உடல் மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கு பயன்படும் வண்ணம் உடல் தானம் வழங்கப்பட்டுள்ளது. இது நம் இனத்துக்கு பெருமை!

நம் இனத்தின் மிகச்சிறந்த இலக்கியப் படைப்பாளியின் இழப்பு நம் இனத்திற்கு மட்டுமல்ல ஒட்டு மொத்த தமிழ் இலக்கிய உலகிற்கும் பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா மோட்சத்தை அடைய இறைவனை பிரார்த்திப்போம். அன்னாரை இழந்து வாடும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்கம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

---



டேக்பான் ஆறு மாநில ரெட்டி நலச் சங்க தலைவர் திரு எம்.வி.வைத்தியலிங்கம் ரெட்டியார் அவர்களின் சகோதரி கணவரும், புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.பி.அசோக் பாபு அவர்களின் தகப்பனாருமான திரு.ஆர்.பாலசுப்ரமணிய ரெட்டியார் 7.7.2023 இரவு 10.40 மணிக்கு புதுவையில் காலமானார். அன்னாரை இழந்து வாடும் அவர் குடும்பத்தார், உற்றார் – உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

---

மதுரை ஆரத்தி ஓட்டல் பங்குதாரரும், டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்க ஆலோசகரும், ரெட்டி இனப் பெரியவர் திரு. ஆர்.பட்டாபிராம ரெட்டியார் அவர்களின் குமாரர் டாக்டர் பி.சஞ்சய் ரெட்டி 27.4.23 அதிகாலை இறைவனடி சேர்ந்தார். அன்னாரை இழந்து வாடும் அவர் குடும்பத்தார், உற்றார் – உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.



## டேக்பான் நிர்வாக குழு பட்டியல்

**காப்பாளர்:** திருச்சி கே.நாராயணன் ரெட்டி

**முதன்மை சங்க ஆலோசகர்:** வேலூர் என்.கிருஷ்ணமூர்த்தி ரெட்டி

**தலைவர்:** புதுச்சேரி ம.வெ.வைத்திலிங்கம் ரெட்டி

**சங்க ஆலோசகர்கள்:** கொல்லம் சங்கர் ரெட்டி, சென்னை நரசிம்மன் ரெட்டி, புதுச்சேரி வெ.ராமச்சந்திரன் ரெட்டி, ஓசூர் ஒய்.வெங்கடசாமி ரெட்டி, கடலூர் ல.ஜெயச்சந்திரன் ரெட்டி, மதுரை ஆர்.பட்டாபிராமன் ரெட்டி, கோயம்புத்தூர் டாக்டர் ஜனார்த்தன் ரெட்டி

**சங்க செயல் தலைவர்கள்:** விளாத்திகுளம் ஆர்.செல்வகுமார் ரெட்டி, துறையூர் கே.ஆர்.ரவி ரெட்டி

**சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்:** ஜெக.நேமிதாஸ்

**இணை ஒருங்கிணைப்பாளர்:** நாகேந்திரன் ரெட்டி

**கேரள மாநில துணைத் தலைவர்:** ஆர்.சுரேஷ் ரெட்டி

**ஆந்திர மாநில ஒருங்கிணைப்பாளர்:** திருப்பதி வெங்கம்பள்ளி தாமோதர ரெட்டி

**தமிழ்நாடு தெற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்:** மதுரை சீனிவாசன் ரெட்டி

**துணைத்தலைவர்கள்:** ஆர்.பட்டாபி ரெட்டி, திருவண்ணாமலை வீரமணி ரெட்டி, டி.வி.ராஜ் வெங்கட் ரெட்டி, எர்ணாவூர் ரவீந்திரநாத் ரெட்டி, புதுச்சேரி எம்.சிவசங்கரன் ரெட்டி எம்.எல்.ஏ., திருவண்ணாமலை எஸ்.கோவிந்தசாமி ரெட்டி, சென்னிகுளம் எல்.ராமசுப்பிரமணியம் ரெட்டி, சிவகாசி ஆர்.சண்முகம் அய்யா ரெட்டி

**தெலுங்கானா மாநில துணைத் தலைவர்:** ரவி ரெட்டி

**கர்நாடக மாநில துணைத்தலைவர்:** கிரீஷ் ரெட்டி

**பொதுச் செயலாளர்:** திண்டிவனம் ஜி.கிருபாகரன் ரெட்டி

**நிர்வாக பொதுச் செயலாளர்:** புதுச்சேரி ஜெ.சந்திரசேகரன் ரெட்டி

**பொருளாளர்:** புதுச்சேரி எஸ்.தர்மசிவம் ரெட்டி

**இணைச் செயலாளர்கள்:** புதுச்சேரி ஆர்.பிரபாகரன் ரெட்டி, கும்பகோணம் எஸ்.ரமேஷ் ரெட்டி, கோயம்புத்தூர் பி.கிருஷ்ணமூர்த்தி ரெட்டி, கேரளா ஆர்.ஜனார்த்தன் ரெட்டி, சென்னை ஜி.ஆர். ரவிச்சந்திரன் ரெட்டி, திண்டிவனம் ஆர்.பாபு ரெட்டி, திருவண்ணாமலை வெங்கடாசலபதி ரெட்டி, சென்னை வி.ரவிச்சந்திரன் ரெட்டி

**எஸ்.டி.பி.சி. ஓ.பி.சி. பிரிவு தலைவர்:** திருவண்ணாமலை எஸ்.டி.தனக்கோட்டி ரெட்டி

**வழக்கறிஞர் பிரிவுத் தலைவர்:** சென்னை ஜி.ஆர்.ரவிச்சந்திரன் ரெட்டி

**மகளிர் பிரிவு தலைவி:** மதுரை எஸ்.தேவசேனா ரெட்டி

**மகளிர் பிரிவு செயலாளர்:** டாக்டர் ஆர்.அனிதா சாந்தகுமார் ரெட்டி

**இளைஞர் பிரிவு தலைவர்:** டாக்டர் டி.எஸ்.அமர்பிரசாத் ரெட்டி

**இளைஞர் பிரிவு செயலாளர்:** திண்டிவனம் எஸ்.சீனிவாசன் ரெட்டி

**நிர்வாகக் குழு உறுப்பினர்கள்:** மதுரை எம்.சிவசங்கரன் ரெட்டி, மதுரை டி.சதீஷ்குமார் ரெட்டி, சாத்தூர் என்.சந்திரபால் ரெட்டி, தூத்துக்குடி பி.கணேசன் ரெட்டி, கடலூர் ரவிச்சந்திரன் ரெட்டி, கேரள வேணுகோபால் ரெட்டி, சென்னை முத்துகிருஷ்ணன் ரெட்டி, கேரளா, கொல்லம் எஸ்.ராமராஜ் ரெட்டி, வேலூர் கே.விமல்ராஜ் ரெட்டி, திருவனந்தபுரம் ஆர்.கிருஷ்ணசுவாமி ரெட்டி, செங்கல்பட்டு ஆத்தூர் சி,பாலகிருஷ்ண ரெட்டி, கோட்டயம் ஆர்.விசுவநாதன் ரெட்டி, திருச்சி வீ.ராஜேந்திரன் ரெட்டி, புதுச்சேரி பி.நரசிம்மன் ரெட்டி, பட்டுக்கோட்டை ராம்குமார் ரெட்டி, புதுச்சேரி வெ.ஜெயப்பிரகாஷ் ரெட்டி, சேலம் ஜி.காந்திராமன் ரெட்டி, புதுச்சேரி பி.வாசு ரெட்டி, கரூர் சுப்புராமன் ரெட்டி, காரைக்கால் ஞானசேகரன் ரெட்டி, மதுரை கே.குருநாதன் ரெட்டி, திண்டிவனம் பாலப்பட்டு சீனிவாச ரெட்டி.

# அன்பான வேண்டுகோள்!

அன்பு சொந்தங்களே! வணக்கம். நலம் நாட நாட்டம். நமக்கு நாம். நாடு நமது.

ரெட்டி இனத்திற்கு தாங்கள் ஆற்றிவரும் தொண்டினை நன்றியோடு எண்ணி மகிழ்கிறேன்! 'ரெட்டி பண்பாடு' – காலாண்டு இதழ் பெரியவர்களின் ஆலோசனைகளின்படி 'டேக்பான்' ஆறு மாநில ரெட்டி நல சங்கத்தின் மூலம் தொடர்ந்து புதுப் பொலிவுடன் தங்கள் கரத்தில் தவழ்கிறது. தொடர்ந்து உங்கள் ஆதரவையும், ஆலோசனைகளையும் நல்கிட விழைகின்றேன்.

தங்கள் பகுதியில் நடக்கும் நிகழ்ச்சிகளை ஒளிப்படத்துடன் அனுப்பி வைத்தால் 'ரெட்டி பண்பாடு' இதழில் வெளியிட ஏதுவாக இருக்கும்!

நமது 'ரெட்டி பண்பாடு' இதழ் நமது இனத்தவர்களின் சாதனைகள், சரித்திரங்கள், ஆலயங்களின் ஆன்மீக செய்திகள், மருத்துவர்களின் ஆலோசனைகள், தொழில் அதிபர்களின் ஆலோசனைகள், இல்லத்தரசிகளின் இனிய சமையல் குறிப்புகள், கல்வி, விவசாயம், தொழில் – வேலைவாய்ப்பு செய்திகள், திருமண தகவல் செய்திகள், ரெட்டி சங்கங்களின் தொண்டு செய்திகள், இன்னும் பல செய்திகளுடன் 'ரெட்டி பண்பாடு' தொடர்ந்து வெளிவர உள்ளது. தங்களின் ஆதரவை நல்கிட மீண்டும் வேண்டுகிறேன். நன்றி!

## சந்தா விபரம்

புரவலர் சந்தா ரூபாய் – 15 ஆயிரம்.
ஆயுள் சந்தா ரூபாய் – 5 ஆயிரம்.




## விளம்பரக் கட்டணங்கள்!

வருடத்திற்கு (4 இதழ்களுக்கு)

| | |
|---|---|
| முழு பக்கம் பல வண்ணம் | – ரூபாய் 8,000 |
| அரைப்பக்கம் பல வண்ணம் | – ரூபாய் 4,000 |
| முழு பக்கம் கருப்பு – வெள்ளை | – ரூபாய் 4,000 |
| அரைப்பக்கம் கருப்பு – வெள்ளை | – ரூபாய் 2,000 |
| அட்டை 2 வது பக்கம் (பலவண்ணம்) | – ரூபாய் 10,000 |
| அட்டை 3 வது பக்கம் (பலவண்ணம்) | – ரூபாய் 10,000 |
| கடைசி அட்டை 4ம் பக்கம் (பலவண்ணம்) | – ரூபாய் 12,000 |

## சந்தா அனுப்ப வேண்டிய விபரம்.

**இந்தியன் வங்கி, ரெட்டியார் பாளையம் கிளை, பாண்டிச்சேரி, டேக்பான் ரெட்டி நல சங்கம், S.B.A/C.No. 6932384915, I.F.S.Code.No.IDIB000R076.**

**ம.வெ.வைத்திலிங்கம்,** வழக்குறைஞர்,
தலைவர் டேக்பான் ஆறு மாநில ரெட்டி நலசங்கம். தொடர்புக்கு: 98431 33287.

**ஜி.கிருபாகரன்,** வழக்குறைஞர்,
பொதுச்செயலாளர், டேக்பான் ரெட்டி நலச்சங்கம். தொடர்புக்கு: 94433 55481.

**அலுவலக முகவரி:**

24, மெயின் ரோடு, சித்தன்குடி, பாண்டிச்சேரி – 605013.

e-mail: vaithyad@yahoo.com Website: reddysindia.com



# HOTEL JAYARAM

Hotel Jayaram

**MR. V.RAMACHANDRAN** B.A., B.L.,
Managing Director

90, Kamaraj Salai,
Pudhuchery - 605 011
Ph: (0413) 336877, 227191 to 98

- **No Taxes**
- **Checkout Time 24 Hours**
- **Tariff Includes T.V. and Other Facilites**





## Facilites

- Luxuriously furnished Rooms and Suites
- STD and FAX Facilites
- CCTV with 25 TV Channels in all Rooms
- Runnung Hot & Cold Water
- Credit Cards Accepted
- Doctor on Call
- Travel Agent, Rent a Car
- Laundry & Cleaners
- Spacious Car Parking
- Cuisine, Vegetarian South Indian, North Indian
- Banquet & Conference Facilites

E-mail: hoteljayaram@gmail.com Web: www.hoteljayaram.com



ஆர்.எஸ்.ஆர்.ரெசிடென்சி
RSR RESIDENCY
RSR Residency
A Business Class Hotel @ Sivakasi
55 Well furnished room
AC & Non AC Rooms
Executive & Suite Rooms
24 Hour power supply
Complimentary breakfast
Centralised A/C
Balcony in all AC rooms
Fitness Centre
Travel desk
Kanira கனிரா
Multicusion Family Restaurant
உயர்தர சைவ & அசைவ உணவகம்
Exclusive OFFERS for Group Booking Party Orders
South Indian North Indian Chinese Tandoori Chats
Rudra ருத்ரா
Hi-Tech Conference Hall
Ideal for Business Meetings, Conferences and Family Functions
Equipped with Hitech Facilities and Ample seating capacity
Dhara தாரா
Premim Lounge Bar
419-A, Near Bus Stand, Sattur Road, SIVAKASI.
Ph: 04562 278299 278499, 278599, 275499
for Booking:
+91 94427 37189
+91 94428 37189
www.rsrresidency.com
booking@rsrresidency.com




R.S.R
INTERNATIONAL SCHOOL
SENIOR SECONDARY
SIVAKASI
RSR
SYMBOL OF SUCCESS
9677 807 125
9677 817 125
Website :-
www.rsrinternationalschool.com
www.rsrinternatinalschool.org
Email :-
rsr.int.cbseschool@gmail.com
ADMISSION FOR
CLASSES IX & XI
FOR ACADEMIC YEAR
2023 - 2024
AFFILIATED TO CBSE, NEW DELHI
AFFILIATION NO.: 1931442
ADMISSION GOING FOR
CLASSES PRE KG TO VIII
FOR ACADEMIC YEAR
2023 - 2024